இதழ்-34
01.10.2021

பல்சுவை மின்னிதழ்



## பெருவெள்ளத்திற்கான பயணம்

# விழித்து கொள்வோம்!




ஒக்டோபர்-01 உலக முதியோர் தினமாகவும், சிறுவர் தினமாகவும் ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. அனைத்து முதியோர்களுக்கும் முதியோர் தின வாழ்த்தையும், சிறார்களுக்கு சிறுவர் தின வாழ்த்துக்களையும் துமி மின்னிதழ் குழுமம் தெரிவித்து கொள்கிறது.

இவ்விதழின் ஆசிரியர் பதிவை இவ்வாண்டுக்கான முதியோர் தின மற்றும் சிறுவர் தின கருப்போருள்களை நிறைத்து உரு வாக்குகிறோம்.

இவ்வாண்டுக்கான முதியோர் தின கருப் பொருளாக, “அனைத்து வயதினருக்கும் டிஜிட்டல் சமபங்கு” பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. 21ஆம் நூற்றாண்டு டிஜிற்றல் உலகை அடையாளப்படுத்திய போதிலும் கொரோனா டிஜிற்றல் உலகை முழுமையாய் நெறிப்படுத்தியுள்ளது.

இந்த நவீன டிஜிற்றல் தொழில் நுட்பங்களைப் பயன்படுத்துவதில் வயதானவர்கள் மிகவும் பின்தங்கி யிருக்கிறார்கள். இதனை காவோலை விழ குருத்தோலை சிரிக்கும் முதுமொழி பாணியில் இளையோர் நளினமாக பார்க்கும் நிலை காணப்படுகிறது. இந்நிலைமை மாற்றம் பெற வேண்டும் என்ற எண்ணப்பாட்டிலேயே குறித்த கருப்பொருள் மொழியப்பட்டுள்ளது.

“ஒவ்வொரு குழந்தைக்கும் ஒரு நல்ல எதிர்காலத்தை நினை த்துப் பாருங்கள்.” என்பதுவே இவ்வாண்டுக்கான சர்வதேச சிறுவர் தினத்தின் கருப்பொருளாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. ஒவ்வொரு ஆண்டும் 3.6 மில்லியனுக்கும் அதிகமான குழந்தைகள் சம்பந்தப்பட்ட குழந்தை பாதுகாப்பு நிறுவனங்களுக்கு 3.6 மில்லியனுக்கும் அதிகமான பரிந்துரைகள் செய்யப்படுகின்றன. சிறுவர்களுக்கு எதிரான துஷ்பிரயோகங்கள் தொடர்பில் இப்பரிந்துரைகளின் எண்ணிக்கை நிறைவான தரவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. சிறார்களின் எதிர்காலத்தை அழிப்பது நாளைய உலகையே நிர்மூலமாக்கும் செயலாகும். இந்நிலைமையிலும் மாற்றங்கள் வேண்டும்.

கருப்பொருட்களும் தினங்களும் கொண்டாட்டங்களுடன் கடந்து செல்வதற்கானது இல்லை.

*விழிப்படைய வேண்டும்!!*
*விழிப்படைய செய்ய வேண்டும்!!!*

இணை ஆசிரியர்கள்
ஜெ.வி. மகாசேனன்
இ. வினோஜன்

திறனாய்வாளர்கள்
கு. கீர்த்தனன்
த. அபிவர்ணா

ஆசிரியர்
ச. சந்தோஷன்

வடிவமைப்பாளர்
வ. குணநீதன்

துமி பல்கலை மின்னிதழ்
www.thumi.org
thumi2016@gmail.com
www.facebook.com/Thumi06

# இவ்விதழில் துமித்தவை...

04 குழந்தைகளில் ஏற்படும் வலிப்பு
08 அவளுடன் ஒருநாள்
13 குறுக்கெழுத்துப் போட்டி
14 வெளியில் வாருங்கள் குழந்தைகளே
16 சாபமா என் சபதம்
19 மரணம் என்னும் தூது வந்தது
24 பரிசு வேண்டாம்
27 சிங்ககிரித்தலைவன்
30 கொரோனா காலத்தில் வாய் சுகாதாரம்
35 சித்திராங்கதா
41 ஓசோன் படையின் பாதிப்புக்கள்
47 ரி20 உலகக் கிண்ண அணிகளின் அலசல்

# குழந்தைகளில் ஏற்படும் வலிப்பு / காக்கை வலிப்பு (EPILEPSY)

வைத்தியர் கணேஷ்


இந்த நோய் பிறப்பிலிருந்து எந்த வயதினருக்கும் வரலாம்.

மூளையில் ஏற்படும் அசாதாரண சமிக்ஞைகளின் விளைவாக ஏற்படுவதாகும்.

குடும்ப உறுப்பினர்களுக்கும் இருக்கலாம்.

## இந்நோயின் குணங்குறிகள் (Clinical Features of Epilepsy)

1. பிள்ளை திடிரென நினைவற்று விழலாம்.
2. இரு கை கால்களிலும் உதறல் எடுக்கலாம்.





3. கண் மட்டும் அசையலாம்.
4. கை கால்கள் அசைவின்றி (கட்டை போல) இருக்கலாம்.
5. உதட்டு ஓரம் சின்ன அசைவுகள் அவதானிக்கலாம்.
6. பிள்ளை அசைவின்றி சுயநினைவின்றி நிற்கலாம்.

## வலிப்பை தூண்டும் காரணிகள்

1. ஏதாவது கிருமித்தொற்று
2. உடலில் உள்ள கனியங்களின் சமனிலை இன்மை
3. குருதியில் குளுக்கோஸின் அளவு குறைவடைதல்
4. கிராமமாக மாத்திரைகளை எடுக்காத நிலமைகள்
5. குறைவான அளவில் மாத்திரைகளை எடுத்தல்

காய்ச்சல் போன்ற தூண்டும் காரணிகள் இல்லாத போது வலிப்பு இடம்பெறும் போது வலிப்பிற்கான காரணங்களை அடையாளம் காண்பதற்காக வைத்தியரினால் தேவையான குருதி பரிசோதனைகள். X-கதிர் தலைப்பட்டி (EEG), ஸ்கேன் போன்ற பரிசோதனைகளுக்கு சிபாரிசு செய்யப்பட்டு அவற்றின் முடிவுகளின் அடிப்படையில் தேவையான சிகிச்சை முறையினை வைத்தியர் ஒழுங்குபடுத்துவார்.




கரக்கை வலிப்பிற்கான சிகிச்சை!

பிள்ளைகளுக்குரிய சிகிச்சையானது வலிப்பின் இயல்பிற்கு தகந்தவாறு வைத்தியரினால் தீர்மானிக்கப்படுவதுடன் பொதுவாக மூன்று வருடங்களுக்கு வைத்தியரின் கண்காணிப்பில் தொடர்ச்சியான கிளினிக் அடிப்படையில் தொடரவேண்டும். கிளினிக் நடைமுறையானது பொதுவாக மாதம் ஒரு முறை அல்லது வைத்தியரின் அறிவுரைக்கு ஏற்ப அமைகின்றன.

சிகிச்சையை தொடர்ச்சியாக இடைவிடாமல் தொடர்வது முக்கியமானது ஏனெனில் பிள்ளைக்குரிய மருந்தின் அளவானது பிள்ளையின் நிறைக்கேற்ப வழங்கப்படுவதுடன், மருந்தின் அளவானது குறைந்த அளவிலிருந்து அதிகரித்து செல்லப்படுவதுடன் சிகிச்சையானது தொடர்ச்சியாக மூன்று வருடங்களுக்கு வைத்தியரின் பரிந்துரைக்கு அமைவாக நடக்க வேண்டும். இக் காலப்பகுதியில் வலிப்புகள் வராதவிடத்து மருந்தானது மெதுவாக ஆறு மாதங்களுக்கு குறைத்து நிறுத்தப்படலாம்.

குறித்த சிகிச்சை காலப்பகுதியில் வலிப்பு மீண்டும் வருமாயின் முன்னர் பரிந்துரைக்கப்பட்ட மாத்திரைகள் சரியான அளவில் குறித்த நேரத்தில் வழங்கப்பட்டுள்ளதா (உதரணமாக மாத்திரை காலை 7 மணிக்கு வழங்கப்பட்டால் மாலை 7 மணிக்கு வழங்கப்பட்டதா, கிளினிக் நடைமுறை சரியாக தொடரப்பட்டுள்ளதா என்பன ஆராயப்பட்டு வேறு மாத்திரைகள் சேர்த்து வழங்கப்படலாம்.

குறித்த காலத்தின் பின்னர் மருந்தானது குறைத்து நிறுத்தப்படுகின்ற வேளையில் வலிப்பானது மீண்டும் வருமாயின் வைத்திய ஆலோசனையுடன் சிகிச்சையை மீள் ஒழுங்குபடுத்த வேண்டும்.



சிகிச்சையின் போது பெற்றோர் பொறுமையாக நம்பிக்கையுடன் வைத்தியரின் ஆலோசனைகள் பரிந்துரைகளுக்கு அமைவாக சிகிச்சையை தொடர்கின்ற வேளையில் சிறந்த முன்னேற்றகரமான நிலையை அடையலாம்.



## வலிப்பு வருபவர்கள் எடுத்துக்கொள்ள வேண்டிய முன் எச்சரிக்கைகள்!

1.வலிப்பு உள்ளவர்கள் வைத்தியரினால் பரிந்துரைக்கப்பட்ட சிகிச்சையை உரிய முறையில் பின்பற்றுதல் வேண்டும்.கிளினிக் நடைமுறைகளை ஒழுங்காக பேண வேண்டும்.

2. நீர் நிலைகள்,நீச்சல் குளங்கள்,தீ சம்பந்தப்பட்ட நிகழ்வுகள்,உயரமான இடங்களில் ஏறுதல் போன்றவற்றை தவிர்த்தல் அல்லது தனியாக ஈடுபடுதல் கூடாது.



3. முன் பள்ளி,பாடசாலை ஆசிரியர்களிடம் பிள்ளையின் வலிப்பு பற்றி எடுத்துக்கூறுவதுடன் அவற்றின் போது செயற்படுத்த வேண்டியவற்றை எடுத்துக்கூறல்.

4. பிள்ளைகளுக்கு உரிய வேளையில் உணவுகளை கொடுத்தல் வேண்டும். நேரம் தவறி சாப்பிடுதல் அல்லது சாப்பிடாமல் தவிர்த்தல் கூடாது.

5. உணவு வகைகளில் எந்த காட்டுப்பாடுகளும் தேவையில்லை,எல்லா வகையான உணவுகளையும் கொடுக்கலாம். (உதாரணமாக குளிர்ந்த உணவுகள் சூடான இனிப்பான)

6.அதிக நேரம் கண் விழித்தல் கூடாது.சீரான அமைதியான தூ க்கம் அவசியம்.

7.பிள்ளைக்கு தேவையற்ற மன அழுத்தங்களை தவிர்க்க வேண்டும்.

8.வலிப்பின் போது பிள்ளையை இடது புறமாக சரித்து வளர்த்துதல் வேண்டும்.





10. வலிப்பின் போது பிள்ளையை தூக்கி தோலில் போடுதல் அல்லது நிமிர்த்தி வைத்தல் கூடாது.



9.பிள்ளைக்கு தொடர்ச்சியாக ஐந்து நிமிடங்களுக்கு மேலாக வலிப்பு இருக்குமானல் இடதுபுறமாக சரித்தவாறு தூக்கி உடனடியாக வைத்தியரை நாட வேண்டும்.

11. வலிப்பின் போது வாயினால் நீர்,பால் மற்றும் மருந்துகள் கொடுத்தல் ஆபத்தானது ஏனெனில் அவை சுவாசத்தொகுதியினுள் செல்வதனால் உயிர் ஆபத்துகள் ஏற்படலாம்.

## மகாகவியின் நூற்றாண்டு நினைவு தினம்

யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கமும் தூமி அமையமும் இணைந்து பாரதியாரின் நூறாவது நினைவு தினத்தையொட்டி, யாழ்ப்பாணம் பருத்தித்துறை வீதியில் அமைந்துள்ள பாரதியார் சிலைக்கு யாழ்ப்பாண தமிழ்ச்சங்க செயலாளரும், யாழ்ப்பாண பல்கலைக்கழக விரிவுரையாளர் இ.சர்வேஸ்வரா அவர்களும் தூமி அமையத்தின் இணை ஸ்தாபகர் ஜீவா ஷஜீவன் அவர்களும் இணைந்து மலர்மாலை சூடி அஞ்சலி செய்தனர்.



# அவளுடன் ஒரு நாள்

2

கிஷோர்த்தனா சிவானந்தா
மூன்றாம் வருட மாணவி
தேசிய சமூக மேம்பாட்டு நிறுவனம்

நீளமாயும் அழகாயும் இருந்த அவளுடைய கூந்தல் கத்தரிக்கப்பட்டு காதுமடல்கள் வரை பரவியிருக்க.. சோடிச்சிமிக்கிகள் தொங்கிய அந்த இரு காதுமடல்களும் வெறுச்சோடிப்போய் கிடந்தன. தலையை அசைத்து அசைத்து அவள் பேசுகின்ற பொழுது காற்றில் படர்கின்ற கருங்கூந்தலில் ஒரு வாசம் வருமே, அதில் ஜீவன் சில சமயங்களில் மயங்கியே போய்விடுவதாகவும், பின்னர் சோடிச்சிமிக்கிகளின் சத்தத்தில்தான் தான் விழித்துக்கொள்வதாகவும் கூட எத்தனையோ காதல் கவிதைகளும் அவளுக்காக எழுதியிருக்கிறான்.

இரு புருவங்களுக்கும் இடையே அவள் வைத்துக்கொள்ளும் பொட்டு. அதுவும் இருக்கவில்லை. நெற்றி வெற்று நெற்றியாக இருந்தது. கண்ணுக்கு முன்னே பூத்துச்செழித்த ஒரு பூங்காவனம் திடீரென வரண்டு போன பாழ்நிலமாய் மாறினால் அது எப்படி இருக்கும்? அதை எப்படி அவ்வளவு எளிதில் ஜீரணித்துக்கொள்ள முடியும்? காதல் பெருகி பொங்கிக்கொண்டிருக்கின்ற ஒரு மனத்திற்கு இந்தக்கொடூரத்தை ஏற்றுக்கொள்வது எத்தனை கடினமானது? ஜீவனின் மனது கிடந்து பதைக்கிறது. மார்புக்கும் வயிற்றுக்கும் உள்ள தூரத்தில் இனம்புரியாத ஒரு வருடல் இருக்கத்தான் செய்கின்றது. இவை அனைத்துமே பொய்யாகிவிடக்கூடாதா? ஒரு நிமிடம் நப்பாசையில் கண்களை மூடி எண்ணிக் கொள்கின்றான்.

கண்களை திறக்கின்ற பொழுது அவளுடைய கருவிழிகள் இரண்டும் அவனை ஒரு தேடல் கலந்த காதலில் பார்க்கின்றன. அந்த கண்கள் இரண்டும் காண்பவர் அனைவருக்கும் சொர்க்கத்தை நொடிகளில் காட்டிவிடும் காந்தங்கள். பார்த்தால் பார்த்துக்கொண்டே இருக்கலாம். ஆனால் விடிகாலையில் போட்ட தூக்க மருந்தின் விளைவால் அந்த காந்த விழிகள் இரண்டும் உயிரின்றி பாதி திறந்த வண்ணம் இருந்தன.

"அது.. அ.."

ஜீவன் ஏதோ பேச நினைக்கின்றான், ஆனால் முடியவில்லை.

வார்த்தைகள் பிறக்க முன்னே மரணித்துப் போகின்றன. அவனுடைய கண்களில் காதல் நீராய் கசிகின்றது. கசிந்த காதல் கன்னங்களில் பட்டு ஒழுகி அவனுடைய உதட்டு வரிப்பள்ளங்களில் வடிந்து போகின்றது. ஆண்கள்

அழமாட்டார்கள் என்று யார் சொன்னது? ஆண்களும் அழுவார்கள். மெய்யான மையல் கண் முன்னே சாம்பலாகி மடிகின்ற பொழுது எந்த ஆணுமே உடையத்தான் செய்கின்றான்.

அவன் அழுதுகொண்டிருக்கின்றான். கண்களில் நீர் பெருகிக் கொண்டிருக்கின்றது. ஆனால் அந்த கள்ளி ஒக்சிஜன் பைப்பிற்குள் இருந்து சிரிக்கிறாள். இவளை என்ன செய்வான் அவன்? முதலாவது தடவையாக அவளுக்கு உடம்பு சரியில்லாமல் போனது என்று ஒரு முறை ஜீவன் அழுதிருக்கிறான். அப்பொழுது கூட,

“ஐயோ என் சின்ன ஜீவன் பாப்பா, ஏன்டா அழுற என் தங்கமே..”

என்று அவன் அழுகின்ற பொழுது கூட அவனை அழவிடாமல் கண்ணீரோடு சேர்த்து சிரிக்க வைத்தவள் இந்த மாயக்காரி. ஆனால் அது வேறு, இது வேறு. இன்று இப்படியான ஒரு சந்தர்ப்பத்தில் கூட இவளால் எப்படி சிரிக்க முடிகிறது? உண்மையிலேயே இவள் மாயக்காரிதான்.

பாதி திறந்த விழிகளிரண்டும் அந்தப் புன்னகையை அள்ளிவந்து ஜீவனிடம் சேர்க்க, மெய்சிலிர்த்துச் சிலும்பிப்போனான் அவன்.




நயனி

அந்த வலியிலும் அவனுக்காக புன்னகைக்கிறாளே, பதிலுக்கு அவனும் புன்னகைத்தான்.

கன்னங்களில் வடிந்திருந்த நீரை ஷேட் காலர்களால் துடைத்துவிட்டு கட்டிலுக்கு அருகிலிருந்த நாற்காலியில் வந்து அமர்ந்தான்.

அத்தோடு எழுந்து போய் சிறுநீர் மற்றும் மலம் கழிக்க முடியாதவர்களுக்காக அமைக்கப்பட்ட ஒரு கட்டிலில்தான் அவள் இருந்தாள். ஜீவனின் மனது நெருப்பாய் சுட்டெரித்தது அவனை.

முதல் முறையாக தன்னை கட்டியணைத்து அவள் தந்த முதல் முத்தம்.

முதல்முறையாக ஒரு சிறுபிள்ளை போல தன் மடியில் உட்கார்ந்து கொண்டு பின்னால் திரும்பி ஜீவனை பார்த்து அவள் சிரித்த சிரிப்பு.

எல்லாமே ஒரு கலவையாய் சேர்ந்து ஜீவனை வதைத்துக்கொண்டிருந்தன.

தைரியத்தையும் காதலையும் வரவழைத்துக் கொண்டு பேசத் தொடங்கினான்.

“இப்பொ..”

“இப்பொ உனக்கு..”

“இப்ப எப்படி?”

முடிந்த மட்டும் முயற்சித்து பேசினான். அவளால் பதிலுக்கு பேசமுடியாது தான். ஆனால் அதே புன்னகை மாறாமல் கையசைக்கிறாள் அவள், வலியிலும் சிரிக்கிறாள். அவளுக்காக என்ன வேண்டுமானாலும் செய்யலாமே.

மறுபடியும் பேசிப்பார்க்கின்றான்.

”இப்ப உனக்கு நல்லமா?”

காற்றில் அசைந்த அவளுடைய விரல்களுக்கு, ரிதம் சேர்த்து அவள் காதோரம் அவன் பாடிய பாட்டு நிச்சயம் அவளுக்குக் கேட்டிருக்க வேண்டும். இல்லையென்றால்த்தான் அவளுக்கு அருகிலிருந்த அந்த இதய அலைகளை காட்டுகிற பெட்டி அவளுடைய நேர் இதய அலைகளை அவ்வளவு துல்லியமாகக் காட்டியிறாதே!

மீண்டும் புன்னகைக்கிறாள் சிறிய தலையசைவுடன்.

காலையில் வந்தவன், பகல் கடந்து, நேரம் மாலை வேளையாய் போனது கூட தெரியாமல் அவளுடனேயே கட்டிலில் இருந்தான் கண்களால் கதைகளை பேசியபடி, அவளை சிரிக்க வைத்துக்கொண்டும், கட்டிலோடு அடங்கிப் போனவளின் கனவுகளை காற்றோடு பறக்க வைத்துக்கொண்டும்.

“அன்னிக்கு ஒரு நாள் நான் உன்ன பாக்க உன் வீட்டுக்கு வெளிய நின்னுட்டு இருந்தன். ராத்திரி ஒரு 2 மணி இருக்கும். நீ கூட மேல்மாடியில வந்து நிண்ணு கை காட்டினியே..

அப்புறமா நீ உள்ள போயிட்ட. நீ போன அப்புறம் எனக்கு என்னாச்சுனு தெரியுமா? அந்த நாய் பேரு என்ன? உங்க அப்பா கூடவே சுத்துமே.. ஆ.. ஹஸ்கி.. அது தொறத்த தொடங்கிருச்சு என்ன.. அன்னிக்கு ஓடுனன் பாரு ஒரு ஓட்டம்.. ஒலிம்பிக் போயிருந்தா நான் அன்னிக்கு ஜெயிச்சிருப்பன்..”

இந்த கதைகளையெல்லாம் சத்த மில்லாமல் கேட்டுக்கொண்டிருந்தவள், கண்களை சிறிதாக்கி உதட்டை விரித்து புன்னகைத்தாள். பழையதையெல்லாம் தன்னுடன் சேர்ந்து எண்ணிபார்த்து மீட்டிக் கொண்டிருக்கிறாளென ஜீவனும் அனுமானித்துக்கொண்டே பல பல கதைகளை பேச ஆரம்பித்தான். நேரம் போவதே தெரியாமல் அவளும் புன்னகைத்து புன்னகைத்து ஜீவனயே பார்த்த வண்ணம் இருந்தாள்.

உணவு வேளைகள் கொடுக்கப்பட்டும் அவன் உண்ணவில்லை. நீரை மட்டும் அருந்திக்கொண்டான். நீரை மட்டுமே.

இடையிடையே நேர்ஸ்மார் இருவராய் வந்து சேலையினை மாற்றிவிட்டும் ரிப்போட்டுக்களை பார்த்துவிட்டும் போனார்கள்.

அசைந்த விரல்கள் திடீரென அவனை இறுகப்பிடித்துக்கொண்டன. கதைகளைப் பேசிய பாதியில், அவளுடைய பாதி திறந்த கண்களை பார்த்தான்.

”என்னாச்சும்மா?”

அவள் லேசாய் சிலமுறை கண்களை மூடித்திறந்தாள்.

“நான் உன்னுடனேயே இருந்துவிடுகிறேனே.. ப்ளீஸ்.. ப்ளீஸ்..”

என்று அவளுடைய குறும்பு கலந்த பிடிவாதமான தொனியில் அவள் கேட்பது போல இருந்தது அந்தப்பார்வை.

அந்தப் பார்வையிலிருந்த சொல்ல முடியாத ஒரு தவிப்பு. மீண்டும் ஜீவனின் கண்கள் கண்ணீரால் நிரம்பி வழிய,

“நீ என்னுடன் தான் இருக்க வேண்டும், அப்படியெல்லாம் உன்னால் என்னைவிட்டு எங்கும் போய்விட முடியாது”

என்பது போல அவளுடைய கையை இன்னும் இறுகப் பற்றியபடி, அதிலேயே தலையை வைத்துக்கொண்டு அப்படியே கண்ணயர்ந்து உறங்கிப்போனான்.

சில மணி நேரங்கள் உறங்கியிருப்பான் போல. வெளியே சோவென மழை பெய்து கொண்டிருக்கும் சத்தம் லேசாக கேட்டது அவனுக்கு. அறையின் ஜன்னல்கள் திறந்திருந்ததாலோ என்னமோ, இயற்கை அன்னையின் இலவச ஏசியில் உடம்பு குளிரில் தடுமாறியது. இந்த நாட்களில்

அவனுக்கு சரியான உறக்கம், உணவு எதுவுமே இல்லாததால் அவனால் எழுந்திருக்கக்கூட முடியவில்லை.

“..தென்றல் வந்து தீண்டும் போது என்ன வண்ணமோ மனசுல..“

“..தென்றல் வந்து தீண்டும் போது என்ன வண்ணமோ மனசுல..“

ஜீவனின் கைப்பேசி இரண்டாவது முறையாக ஒலித்தோய்ந்துபோகவும் தான், அவன் திடீரென எழுந்து கொண்டான். எழுந்ததும் அவன் முதலில் பார்த்தது உயிரற்ற அந்த இரு கண்களையும் தான்.

நேற்றுக்காலையில் உயிர்ப்புடன் அவனைப் பார்த்து ஏங்கிக் கொண்டிருந்த அந்த இரண்டு கண்களும், ஏக்கம் தீர்ந்து உயிர்ப் பற்றுப் போயே போனது. இதய அலை காட்டும் பெட்டி கூட உணர முடியாத தூரத்திற்கு போயிருந்தன அவளுடைய இதயத்தின் அலைகளும்.

அதே கட்டில்.. அவள்.. அவளுடன் ஒரு நாள்..

“..தென்றல் வந்து தீண்....“

தொலைபேசியை நிறுத்திவிட்டு காதில் வைத்தான்.

அடங்கிப்போயிருந்த அந்த அறைக்குள் மெதுவாக ஒரு சத்தம். ”ம்..?”

“..ஜீவா எங்கப்பா இருக்க? நான் நெறைய வாட்டி கோல் பண்ணி இருந்தனே.. எங்கப்பா இருக்க?..“ - வசந்தி

தன் காதலியை பற்றி அப்பா, சித்தி, மாமா, அத்தை, நண்பர்கள் என எல்லோரும் தெரிந்துதான் இருந்தார்கள். அவர்களாக பார்த்து பேசி வைத்ததுதானே! ஆனால் அவளுக்கு என்ன நடந்தது? எப்படி இருக்கிறாள்? என யாருக்குமே தெரியாது அவனைத்தவிர. தெரிய வேண்டாம், சொல்லியும் விடாதே என சத்தியமும் வாங்கியிருந்தாளே அவள்.

“..ஜீவா.. தம்பீ.. இருக்கியாப்பா..?..“ - வசந்தி

திடுக்கிட்டான்.

இன்னும் அவனுடைய கை அவளுடைய கையைக் கோர்த்த வண்ணம்.

“................“ எதுவுமே பேசவில்லை ஜீவன்.

இந்த மௌனத்தில் அவள் மட்டுமே கலந்திருந்தாள்.

அவளுடன் அந்த ஒரு நாள். மௌனமாகவே.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | | | 4 | 5 | |
| 6 | | | | | 7 | | 8 |
| 9 | | | 10 | | 11 | | |
| | | | 12 | 13 | | | |
| | | 14 | | | | 15 | |
| 16 | 17 | | 18 | | | | |
| 19 | | 20 | | | | 21 | 22 |
| | 23 | | | | | | |




சரியான விடைகளை
அனுப்ப வேண்டிய முகவரி
www.thumi.org
thumi2016@gmail.com
www.facebook.com/Thumi06

## இடமிருந்து வலம்

1. சிக்காக்கோவில் உரையாற்றிய வீரத்தமிழ்த் துறவி
6. ஒரு கிரகம்
7. வீதிகள் ஊடறுத்துச் செல்லும் இடம்
9. பழந்தமிழர் ஆபரணம் (குழம்பி)
11. உள்ளம் (திரும்பி)
12. யோகக்கலையை வகுத்த முனிவர் (திரும்பி)
14. குதிரை
15. பஞ்சாங்கத்தில் பார்ப்பது
16. உடலின் அங்கம்
18. மிகை (திரும்பி)
19. விலங்குகளை கொன்று புசிப்பவர்கள் (திரும்பி)
21. புகார் (திரும்பி)
23. பலாவின் தித்திப்பான பகுதி
24. உள்ளி

## மேலிருந்து கீழ்

1. மட்டக்களப்பைச் சேர்ந்த தமிழறிஞர்
2. மத ஒழுக்கங்களைக் கொண்ட நூல்
3. சூழல் மாசடைதலுக்கு காரணமான இரசாயனம் (குழம்பி)
4. அடைக்கலம் (குழம்பி)
5. அருணகிரிநாதர் பாடிய நூல் (குழம்பி)
8. மேலான தலைவன் (குழம்பி)
10. துன்பம்
13. சில்லு
17. மயானம் (திரும்பி)
20. நேரம்
22. இலங்கையில் கிறிஸ்தவர்களின் புனித தலம்

## குறுக்கெழுத்துப்போட்டி - 29 விடைகள்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 ச | த் | 2 தி | 3 ய | 4 சோ | த | 5 னை | |
| ந் | | 6 ரு | கு | வி | | 7 ஆ | 8 சி |
| 9 தி | னை | | 10 வ | ய | 11 ல் | | கி |
| ர | | 12 ச | ன் | த் | தி | ய | ரி |
| 13 ம | 14 கு | தி | | | ம | | யா |
| 15 தி | க | | 16 தோ | 17 ல் | | 18 த | |
| | 19 ச | 20 டை | | 21 த | 22 லை | வ | லி |
| 23 த | ம் | ப | ல | கா | ம | ம் | |

# வெளியில் வாருங்கள் குழந்தைகளே!

தரையில் ஓடியாடி விளையாடாமல், திரையில் பொம்மைகளை ஓட வைத்தும் ஆட வைத்தும் கொண்டிருக்கும் எனதருமைக் குழந்தைகளே! கேளுங்கள்...

இந்த வயதில் விளையாடுவது தான் உங்கள் கல்வி, வேலை, பொழுது போக்கு எல்லாமே! தீரும் வரை விளையாடி தீராத விளையாட்டுப் பிள்ளை என்று பெயர் எடுக்க வேண்டிய வயது இது! நீங்கள் ஓட வேண்டும், பாய வேண்டும், நீந்த வேண்டும், ஏற வேண்டும், முக்கியமாக விழ வேண்டும், அதை விட முக்கியமாக விழுந்த போதெல்லாம் எழ வேண்டும், காயங்கள் பட வேண்டும், மண்ணோடு விளையாட வேண்டும், மரங்களோடு விளையாட வேண்டும், கொப்புகளில் ஊஞ்சல் கட்டி ஆட வேண்டும், பூக்களை பறித்து எறிய வேண்டும், காய்களையும் கனிகளையும் பறித்து சுவையை ஆராய வேண்டும்,

ஏட்டிலே சுரைக்காய் என்று எழுதி விட்டு அதை வெட்டி கறி சமைக்க இயலாது. மிளகாய் உறைக்கும் என்றும் கரும்பு இனிக்கும் என்றும் மனனம் செய்து மண்டையில் ஏற்றாதீர்கள்! கடித்துத் தின்று மென்று பாருங்கள். பட்டறிவு தான் பகுத்தறிவுக்கே அடிப்படை என்பதை உணருங்கள்!

அங்கே இந்த அட்டைப் படத்தைப் பாருங்கள்... உங்களைப் போல ஒரு குழந்தை குதித்துக் குதூகலிப்பதைப் பாருங்கள். அந்த முகத்தைப் பாருங்கள். ஒரு கோடி சூரியப் பிரகாசம் தெரியவில்லையா? அப்படி என்ன மகிழ்வு அந்தக் குழந்தைக்கு? வித விதமான பொம்மைகளுடன் விளையாடும் குழந்தைகளுக்கு கிடைக்காத ஒரு திருப்தி நிறைந்த மகிழ்ச்சி சாதாரண தெரு நாயுடன் தெருவோரமாக விளையாடும் ஒரு குழந்தைக்கு எப்படி கிடைத்தது?

இந்தக் கேள்விக்கான பதிலை வார்த்தைகளில் வடிப்பதும் வர்ணிப்பதும் கடினம். அனுபவித்துப்



பாருங்கள் புரியும். சந்தோசத்தின் எல்லை வரை சென்று வருவீர்கள். குழந்தைகள் தினத்தில் உங்களுக்கு ஒரு பரிசு தரப்போகிறேன். இந்த சந்தோசம் இருக்கும் இடத்திற்கு அழைத்துச் செல்லப் போகிறேன். எங்கென்றா பார்க்கிறீர்கள்? வெளியில் வாருங்கள். நான்கு சுவர்களுக்குள் மட்டுப்படுத்தப்பட்டதா உங்கள் நீண்ட நெடிய வாழ்க்கை. கட்டிலிலோ, கதிரையிலோ இருந்தால் அந்த அளவற்ற ஆனந்தம் அணுவளவும் கிடைக்காது. வெயிலில் காய்ந்து மழையில் நனைந்து இயற்கை தந்த அனைத்தையும் ஆறுதலாக அனுபவியுங்கள். மரங்களோடு பேசுங்கள். மலர்களோடு பாடுங்கள். போதுமான நேரம் இந்த வயதில்த்தான் உங்களிடம் இருக்கிறது. இயற்கையோடு விளையாடுங்கள். இயற்கைக்குள் விளையாடுங்கள்!

பிள்ளையார் பிடிக்கிறேன் என்று குரங்காக்கிக் கொண்டிருக்கும் பெற்றவர்களே! உங்களுடன் ஒரு நிமிடம்!

வெய்யிலில் திரியாதே! வெளியில் திரியாதே! என்றுபொத்தி பொத்தி நோயே வராமல் வளர்ப்பதல்ல சிறப்பு! கணனியில் விளையாடுவதல்ல கௌரவம் ! களனியில், காட்டில், மேட்டில் விளையாடுவதே ஆரோக்கியம்! நோய் வந்து போனால்த்தானே நோய் எதிர்ப்பு சக்தியும் வளரும். நோயே வராமல் குழந்தையை வளர்த்தால் இளைஞனாய் அவன் வளருகையில் நோயாளியாகிப் போவான். நீங்கள் எப்படி வளர்ந்தீர்களோ, அப்படியே உங்கள் குழந்தையையும் வளருங்கள். சொகுசு வாழ்க்கையை குழந்தைக்கு கொடுக்கிறேன் என்று சோம்பல் வாழ்க்கையை கொடுத்து விடாதீர்கள்.

நீங்கள் வளர்ப்பது குழந்தையை மட்டுமல்ல, அடுத்த தலைமுறையை என்பதை மறவாதீர்கள்.

## தெரியுமா உங்களுக்கு.....?

**தாய்வானில் உள்ள ஒரு உணவகத்தில் கழிவறை கோப்பையை போன்றவற்றில் தான் உணவை பரிமாறுகிறார்கள்.கேட்கும் முகம் சுழிகிறதா...? அதுமட்டுமின்றி அந்த உணவகத்தில் இருக்கும் அனைத்து விஷயங்களும் கழிவறை சம்பந்தமானதாகவே இருக்கிறது என்ற ஆச்சரியமான மற்றும் முகம் சுழிக்க வைக்கக்கூடிய ஒரு உண்மையை தெறிந்து கொள்ளுங்கள்.**






தொண்டரடிப்பொடியன்

மனைவிக்கு கண்கண்ட தெய்வம் கணவன் என்றார்கள். என் தெய்வங்கள் ஐந்தும் கல்லாகிப் போய் தலை கவிழ்ந்து முழந்தாலிட்டு உட்கார்ந்திருந்தன. பஞ்ச பூதங்கள் சாட்சியாக எந்த நிலையிலும் என்னை கைவிட மாட்டோமென கரம் பற்றிய என்னவர்கள் கைகள் சகுனியின் பகடைகளால் கட்டுப்பட்டு விட்டன. அடிமைகளாகி விட்டவர்களால் இனி ஆவதொன்றும் இல்லை. எனக்கான கதவுகள் எல்லாம் அடைக்கப்பட்டு விட்டனவா? இந்த அபலையின் குரலுக்கு அபயம் அளிக்க ஒருவருமா இல்லை?

இருக்கிறான்! கோபியருக்காக கோவர்த்தனம் ஏந்தியவன் இருக்கிறான்! காளிங்கனில் நர்த்தனம் ஆடியவன் இருக்கிறான்! வெண்ணையும் உண்பான்! மண்ணையும் உண்பான்! ஆடுபவர்கள் எல்லோரையும் ஆட்டுவிக்கும் இடையன் அவன்! எந்தப் பகடைக்கும் பலியாகாதவன். கவ்வும் சூதையும் கவிழச் செய்பவன்! என் மித்திரன் கண்ணன்!

என்னை என்னாலும் காக்க முடியாதென்பதை உணர்ந்தேன். என் ஆடைகளை பற்றிய கைகளை தளர்த்தி சிரம் மேல் குவித்து ” இனி எல்லாம் உன் செயல்” என்று மாதவனை முழுவதுமாக சரணடைந்தேன். அடுத்த நொடி அவன் வந்துவிட்டான். திரண்ட பலம் முழுவதையும் கொண்டு என்னை போர்த்திய ஆடையை விலக்கிக் கொண்டே இருந்தான் துட்டன் துச்சாதனன். மலை போல் குவிந்தது அவன் அவிழ்த்த ஆடை. ஆனால் வளர்ந்து கொண்டே இருந்தது என்னை போர்த்திய ஆடை! எப்படி? எல்லாம் மாயவனின் மாய லீலைகள்!

அன்றொருநாள் குளக்கரையில் கண்ணன் மானம் காக்க நான் கிழித்துக் கொடுத்த என் சேலையின் ஒரு துண்டு இன்று பல்கிப் பெருகி சேலை மலையாக எனக்கு திருப்பி அனுப்பப்பட்டுக் கொண்டிருக்கிறது. இதைத்தான் பின்னாளில் வள்ளுவர் “காலத்தினால் செய்த உதவி சிறிதெனினும் ஞாலத்தின் மானப்பெரிது” என்கிறார். துண்டாக கொடுத்தது துச்சாதனனை மூர்ச்சையடையச் செய்யும் நீண்ட





துகிலாக மாறியது. உடனிருந்த எவராலும் எதிர்த்து குரலே கொடுக்க முடியாத அந்த சபையில் சத்தமே இல்லாமல் என் சங்கடம் தீர்த்து மானம் காத்தான் கண்ணன்!

ஆபத்தில் உதவியவன் தான்! ஆனால் அவனிலும் எனக்கு ஒரு குறை! ஆண்டவன் என்றால் அழைத்தால்த்தான் வருவானா? அதீத இன்பத்திலும், மிகையான துன்பத்திலும் முக்கியமானவற்றையும் முக்கியமானவர்களையும் மறந்து விடுவது தானே மானிட இயல்பு! மறந்தேன்! அந்த மாதவனாம் மாயவனை மறந்தேன்! அழைத்தால்த்தான் வருவானா? மற்றவருக்குத்தான் அவன் கடவுள். எனக்கு மித்திரன். துன்பம் வர முதலே தோள் கொடுக்க வேண்டியவன் தானே தோழன். அப்படியென்றால் நண்பனாக அவன் தோற்றுவிட்டான்!

முக்காலமும் உணர்ந்த கண்ணனுக்கு என் இந்த கொடுங்காலம் தெரியாமலா போயிருக்கும்! கள்ளன்! பாரதப் போரை என் மூலம் நடத்த நாடகம் போட்டிருக்கிறான்! என் சபதம் குரு வம்சத்தின் சாபமாக வேண்டும் என்பதே அவன் கணக்கு!

ஆண்டவனாக மாதவன் கணக்கும் சரிதான்! கண் முன்னே ஒரு அக்கிரமம் நடக்கிறது. புத்திசாலிகள் என்று தம்மைத்தாமே நம்புபவர்கள் என்ன செய்கிறார்கள் என்றால் அமைதி காக்கிறார்கள். அவர்கள் அந்த சம்பவத்திற்கு ஆதரவாகவும் குரல் கொடுக்கவில்லை. எதிராகவும் குரல் எழுப்பவில்லை. நடப்பதை வேடிக்கை பார்க்கும் பார்வையாளர்களாக அமைதி காக்கிறார்கள். இவர்களின் இந்த உத்தி உத்தமமானதா? மகா பாதகமானது! துகில் பறித்த துச்சாதனனிலும் துரோணர் பாவம் செய்தவராவார். விண்ணையும் பிளந்த என் அழுகுரல்களை அவர்கள் காதுகளுக்குள் வாங்காது விட்ட தவறுக்கு தக்க தண்டனை வழங்க வேண்டியிருந்தது. நடப்பது நடக்கட்டுமென அமைதியாய் இருந்ததற்கான பிரதிபலனை அனைவரும் அனுபவிக்காது விட்டால் இந்த உலகம் இந்த சம்பவத்தை





முன்னுதாரணமாக கொண்டு இயங்கத் தொடங்கிவிடும். அமைதி எப்போதும் நல்லதல்ல என்பதை உணர்த்த அந்த அஸ்தினாபுர அரசவையில் நான் ஆகுதியாக வேண்டியிருந்தது.

சபதமிட்டேன்!
சத்தமாக சபதமிட்டேன்!
சாபமென்றார்கள் சிலர்!

என் சங்கடத்தில் சாந்தமாக இருந்தவர்களுக்கு என் சபதம் சாபமாகப்பட்டாலும் கவலை இல்லை. சாபங்கள் எல்லாம் சபதங்களானால்த்தான் சாத்தியப்படும் என்பதை உணர்ந்தவள் நான். “சொந்தங்கள் மீதா சாபமிடுவாய்? இரக்கமற்றவளா நீ?” என்றார்கள். உயிரினும் மேலான என் மானம் போன போது அந்த சொந்தங்கள் யாராவது என்னை சொந்தமென்று நினைத்தனரா? குரு வம்சத்தின் குலமகள் நானென்று தெரிந்தும் என் முடிபிடித்து இழுத்து வந்து மடியில் அமர்த்தப் பார்த்தவர்களையும் அதை அமைதியாக வேடிக்கை பார்த்தவர்களையும் மன்னிப்பது தான் மிகப் பெரிய அதர்மம். மன்னிக்கப்படுவோம் என்கிற நம்பிக்கையில் தவறுகள் தொடரக் கூடாது.

மற்றொன்றையும் உணருங்கள் மானிடர்களே! மானம் உயிரினும் பெரிது தான்! மறுப்பதற்கில்லை. ஆனால் எமது அத்தனை பிரயத்தனங்களையும் மீறி எமது மானம் பறிக்கப்படுமாயின் அதற்காக உயிரை மாய்ப்பது முட்டாள்த்தனம் மட்டுமல்ல கோழைத்தனமும் தான்.

எம் சக்தியையும் மீறி நடந்ததற்கு நாம் என்ன செய்ய முடியும்? சிந்தித்து செயலாற்றுங்கள்.

***சபதங்கள் சாபங்களாவதும் உண்டு!***
***சாபங்கள் வரங்களாவதும் உண்டு!***

இப்படிக்கு,
பாஞ்சாலி



ரசிக்கும் சீமானே!




# மரணம் என்னும் தூது வந்தது!

இ.தனிஷ்ரன்

அவள் ஆழ்ந்த துயிலில் இருக்கிறாள். பெண்கள் சிலர் அவளை குழுமியிருக்கிறார்கள். அவளுக்கே தெரியாத அவளுடைய உறவினர்களும் அவளுடன் கூடப் படித்த நண்பர்கள், அவளுடைய சகோதர சகோதரிகளின் நண்பர்கள், தாய் தந்தையுடன் கூட வேலை செய்பவர்கள் என்று அத்தனை பேரும் அவளின் கட்டிலருகே வந்து மௌனமாக நிற்கிறார்கள். நின்றவர்கள் பலரும் அவளை வெறித்து பார்க்கிறார்கள்! அப்படி எதை தான் பார்க்கிறார்கள்?

இருண்டு போயிருக்கும் அவளது முகத்தையா? கறுத்துப்போன அவள் உதடுகளையா? அவள் அணிந்திருக்கும் அந்த நாவல் நிற சேலையையா? நெஞ்சின் மேலே மின்னும் தங்கச்சங்கிலியையா? இல்லை இவள் தூங்கும் போது எதற்கு கையுறைகளும் காலுறைகளும் அணிந்திருக்கிறாள் என்ற சிந்தனையா? அல்லது அவளது பூக்கள் தூவிய பஞ்சணை மெத்தை அழகையா? விலையையா?

“பொழுதாகி போனதே
இன்னும் தூக்கமா
சொல்லாமல் போவது
தாயே நியாயமா”

அவளை ஓரிரு நிமிடம் பார்த்து விட்டு அவர்களின் கண்கள், அருகில் அவளது தாயோ தந்தையோ அல்லது சகோதரர்களோ இருக்கிறார்களா என்று தேடுகிறது. கண்ணில் பட, அவர்களை பார்த்து தலையை அசைத்து விட்டோ அல்லது அவர்களது கைகளை பற்றிவிட்டோ நகர்ந்து செல்கிறார்கள். அந்தப்பற்றுதல்,

//போனால் போகட்டும் போடா
இந்த பூமியில் நிலையாய்
வாழ்ந்தவர் யாரடா
போனால் போகட்டும் போடா//

என்ற கால தேவனின் எழுத்தை மீள வாசித்து செல்கிறது. அவளை பார்க்க வந்தவர்களில் சிலரது கண்களில் மட்டும் கண்ணீர். அவர்கள் முன்னர் இவளுடன் நினைவுகளை பரிமாறிக்கொண்டு இருக்கலாம்!



"பிறக்கும் போதும் அழுகின்றாய்
இறக்கும் போதும் அழுகின்றாய்"

தாய்க்கும் தந்தைக்கும் அழுது அழுது கண்ணீர் வற்றி கண்கள் வரண்டு போயிருக்கிறது. ஆனாலும் தன் நெருங்கிய உறவுகளை கண்டதும் தாயின் கண்கள் உடைந்து வழிகிறது. கதறுகிறாள். அவர்களிடமெல்லாம் தன் மகளின் பெருமைகளை மட்டுமே பேசிய வாய் இன்று வார்த்தைகள் இன்றி அழுது தீர்க்கிறது.

"நீ முந்தி போனது
நியாயம் இல்லையே
நான் முந்தி போகவே
யோகம் இல்லையே
என் தேவியே நானும் செய்த குற்றம்
என்ன கூறு ஒரு பார்வை பாரு"

அழுது தீர்த்து அலங்கோலமாகி சுவரிலே தலை சாய்த்தபடியே தானே கொன்று விட்டேனா? எதையும் என்னிடம் சொன்னதில்லையே? படிப்பில் கஷ்டமெண்டு வாயே திறக்கலையே? குற்ற உணர்விலும் கவலையிலும் பொசுங்குகிறாள் அம்மா!

//இரவல் தந்தவன் கேட்கின்றான்
அதை இல்லை என்றால் அவன் விடுவானா
உறவைச் சொல்லி அழுவதனாலே
உயிரை மீண்டும் தருவானா//

அவள் நினைவுகள் இருபது வருடங்களுக்கு முன்னர் இழுத்துச் செல்கிறது.

பிரசவவலி ஆரம்பித்திருக்கிறது. பன்னீர் குடம் உடைந்து விட்டது. அவளை பிரசவ அறைக்கு எடுத்து செல்கிறார்கள். ஒரு தாதி குருதி அமுக்கத்தை அளக்கிறார். வைத்தியர் ஒருவர் கையுறைகளை அணிந்து வந்து அவளது பிறப்புறுப்பில் விரல்களை விட்டு கருப்பை கழுத்து "எட்டு சென்ரிமீற்றர்" விரிந்து விட்டதாக சொல்கிறார். தொடர்ந்து ஏதோ மருந்து ஏற்றுகிறார்கள். ஏதேதோ பேசிக்கொள்கிறார்கள். வலியில் இவள் கண்கள் சொருகிறது.

"மண்ணில் ஒரு செடி முளைச்சா
மண்ணுக்கு அது பிரசவம் தான்
உன்னை பெற துடி துடிச்சா
அன்னைக்கு பூகம்பம் தான்"

பாதங்கள் இரண்டையும் கைகளால் இழுத்து பிடித்த படி மூச்சடக்கி முக்க, பிறப்பு வழி வழியே தலை எட்டிப்பார்க்கிறது.

"அம்மா! இன்னும் நல்லா முக்குங்க!"

தாதிகள் மாறி மாறி கட்டளை பிறப்பிக்கிறார்கள். உயிர் போகும் வலியில் இவள் இன்னும் வயிற்றை



உந்தித்தள்ளுகிறாள். குழந்தையின் தலை இன்னும் கொஞ்சம் வெளியில் வருகிறது. அந்த நிலையில், இன்னொரு தாதி யோனி வழியில் கத்தரிக்கோலை விட்டு தொடை பக்கமாக யோனி வழியை வெட்டுகிறார். சரக் சரக் என்று அந்த சத்தம் இவளுக்கு இப்பொழுதும் ஞாபகம் இருக்கிறது.

இன்னும் ஒரு பலமான முக்கல். "குவா குவா குவா" என்ற சத்தம். அழுகை! அவ்வளவு நேர வலியும் நொடியில் மறைந்து போகிறது. தொப்புள் கொடியை வெட்டிவிட்டு தாதி பிள்ளையை உயர்த்தி காட்டினாள்,

"அம்மா இங்க பாருங்க, பொம்பிளை பிள்ளை!"

"ஆராரிரோ பாடியதாரோ
தூங்கிப் போனதாரோ
யாரோ யாரோ எனக்காரோ யாரோ
என் தெய்வமே இது பொய் தூக்கமா
நான் தூங்கவே இனி நாளாகுமா"

நினைவுகள் நெஞ்சைக் கிழிக்க இன்னும் வீறிட்டு அழுதாள். மகளின் இத்தனை வருட நினைவுகளால் பீடிக்கப்பட்டு உடைந்து கிடந்த தகப்பன், இவளை தாங்கிக்கொண்டே மகளை வெறிக்கிறான்.

"ஆடி அடங்கும் வாழ்கையடா
ஆறடி நிலமே சொந்தமடா
முதலில் நமக்கெல்லாம் தொட்டிலடா
கண் மூடினால் கால் இல்லா கட்டிலடா"

இவள் இன்னும் ஆடவே இல்லையே! இருபது வயது தானே! அவளுக்குள் என்ன அப்படி சோகம்? ஸ்ட்ரெஸ்!! நல்ல பிரெண்ட்சும் இல்லை போல!

அவளை பார்த்து விட்டு வெளியே போடப்பட்டிருந்த தட்டப் பந்தலுக்குக்கு வந்த சிறிசுகளும் பெரிசுகளும் தாங்கள் கேட்டதையும் தங்கள் ஊகங்களையும் வைத்து புலன் விசாரணையை தொடங்கினார்கள்.

"ஒரு நாளேனும் கவலையில்லாமல்
சிரிக்க மறந்தாய் மானிடனே"

சரியான அமைதியான பிள்ளை. ஏதும் காதல் பிரச்சினைகளோ? வருத்தமேதும் வந்து போனால் கூட பரவாயில்லை! பெத்ததுகளுக்கு கொஞ்சம் ஆத்தியா இருக்கும்! இப்பிடி அவசரப்பட்டுட்டாளே! வாழ்க்கையில அப்பிடி என்னத்தை கண்டுது?

"பிறந்தோம் என்பதே முகவுரையாம்
பேசினோம் என்பதே தாய்மொழியாம்
மறந்தோம் என்பதே நித்திரையாம்
மரணம் என்பதே முடிவுரையாம்"

பொலிஸ்காரர் வந்தவங்களே? என்ன ஒண்டும் விசாரிக்கேலையோ? ஏதும் கடிதம் கிடிதம் எழுதி வச்சுக்கிடக்கோ? எங்க பானிலயே தொங்கினது? பொடி போஸ்மோர்ட்டம் போய் தானே வந்தது! தற்கொலை எண்டு உறுதிப்படுத்தியாச்சோ?

//வந்தது தெரியும் போவது எங்கே
வாசல் நமக்கே தெரியாது
வந்தவரெல்லாம் தங்கிவிட்டால்
இந்த மண்ணில் நமக்கே இடமேது//

என்ன வாழ்க்கையோ! இப்பத்தைய பிள்ளைகள் இந்த பேஸ்புக், போனெண்டு அதுகளோட தானே கிடக்குதுகள்! எங்க மனுஷரோட பழகினம்! பிறகு சின்ன கஷ்டம் வந்த உடனையே இப்பிடி பிழையான முடிவுகளை எடுத்துப் போடுறது! அந்தக் காலங்களில எங்களுக்கு சோத்துக்கே வழியில்லை! அதுக்காக செத்தா போனம்?

//வாழ்க்கை என்பது வியாபாரம்
வரும் ஜனனம் என்பது வரவாகும்
அதில் மரணம் என்பது செலவாகும்//

டயரில எழுதி வச்சிருக்காம், இந்த வருசம் சாகணுமெண்டு! படிப்பு அவளுக்கு பிடிக்கேல! தாய் தேப்பனும் படி படியெண்டு ஒரே ஆய்கினையோ யார் கண்டது? உந்த கம்பசில வருசா வருசம் ஒருத்தன் சாகிறான்! என்ன தான் செய்யிறாங்களோ! அவள் பாவி போனது போய் சேந்திட்டாள்! இனி இருக்கிற காலம் வரைக்கும் பெத்ததுகளுக்கு தானே நரகம்!

“ஆடும் வரை ஆட்டம்
ஆயிரத்தில் நாட்டம்
கூடிவரும் கூட்டம்
கொள்ளிவரை வருமா?”

அதுகளும் பிள்ளை படிச்சு தங்களை பாக்கும் எண்டு ஆயிரம் கனவுகளோட இருந்திருக்குங்கள். அவளும் அவ்வளவு கெட்டிக்காரி தான்! திடீரெண்டு என்ன நடந்திச்சுதோ! என்ன பிரச்சனை எண்டாலும் தற்கொலை தீர்வில்லை தானே!

“கனவு காணும் வாழ்க்கை யாவும்
கலைந்து போகும் கோலங்கள்
துடுப்புக்கூட பாரம் என்று
கரையைத் தேடும் ஓடங்கள்”

காடு வா வா எண்டுது வீடு போ போ எண்ட நிலையில இருக்கிற கிழங்களெல்லாம் இப்பவும் இயமனுக்கு தண்ணி காட்டிக்கொண்டு இருக்குதுகள்! இதுகள் பிஞ்சுகள் தாங்களே வலிய போய் சாகுதுகள்! இதுகளை நினைக்க மனுசருக்கு ஆத்திரம் தான் வருகுது!

“சென்றவனைக் கேட்டால்
வந்துவிடு என்பான்
வந்தவனைக் கேட்டால்
சென்று விடு என்பான்”

என்னவோ அண்ணை! பெட்டை செத்துப் போச்சு! இனி என்னத்தை கதைச்சு என்ன பலன்! போனவள் வரவே போறாள்?

//நமக்கும் மேலே ஒருவனடா
அவன் நாலும் தெரிந்த தலைவனடா
தினம் நாடகமாடும் கலைஞனடா
போனால் போகட்டும் போடா//

இஞ்சை பேஸ்புக்கை பார்! இது தான் கதை! ஃபேஸ்புக் பக்கம் போனாலே ஒரே அஞ்சலி போஸ்ட்டும் அவெயர்னஸ் போஸ்டுமா கிடக்கு.

அவள் செத்துப் போனாள் அங்க இருக்கிறவனுக்கு இண்டைக்கு கன்டண்ட்! அவ்வளவு தான்! நாளைக்கே இன்னொண்டு சாகும்! அப்பவும் “தற்கொலை எதற்கும் தீர்வல்ல ரைட்டப்புகள்“

“பிறக்கின்ற போதே
இறக்கின்ற தேதி
இருக்கின்றது என்பது மெய்தானே
ஆசைகள் என்ன ஆணவம் என்ன
உறவுகள் என்பதும் பொய்தானே
உடம்பு என்பது உண்மையில் என்ன
கனவுகள் வாங்கும் பை தானே”

கிரியையள் முடியுது போல! நேரமும் நெருங்குது! என்ன மாதிரி சூசைட் கேஸ் தானே! எரிக்கிறதோ? புதைக்கிறதோ? சுடலை கிட்டவே?

“விட்டுவிடும் ஆவி
பட்டுவிடும் மேனி
சுட்டுவிடும் நெருப்பு
சூனியத்தில் நிலைப்பு”

தற்கொலை எதற்கும் தீர்வல்ல என்பது உண்மை தான்! ஆனால் அந்த நேரத்து மனப்பிறழ்வுக்கு அந்த முடிவு தான் அவர்களுக்கு சரியானதாக தோன்றும். சமூகம் இன்றும்



தற்கொலைக்கு முயல்பவர்களை குற்றவாளிகளாகவே பார்க்கிறது. அந்த நிலையில் அந்த நபரினால் அதை தாண்டி சிந்திக்க முடியவில்லை என்பது தான் உண்மை. அந்த நபர் மற்றும் அவர் சார்ந்த சூழல் தான் ”தற்கொலை” என்ற முடிவுக்கு அழைத்துச்செல்கிறது.

பல காரணங்களால் தீர்மானிக்கப்பட்டாலும் பிரதான மூன்று காரணிகள்,

1.சமூக ஆதரவு (Social support) - குடும்பம், நண்பர்களுடன் நல்ல பிணைப்பு இல்லாதவர்கள்.

2.பிரச்சினைகளை கையாளும் திறன் (coping strategies) - சின்ன சின்ன விஷயத்துக்கும் மன ரீதியான காயப்படுகிற, பிரச்சினைகளை உள ரீதியாக கையாளும் திறன் குறைந்தவர்கள்.

3.தனிநபர் ஆளுமை தொடர்பான காரணிகள் (Personality factors) - தனிமையை விரும்பும் நபர்கள் (Isolated persons), பிறர் கவனம் தேடும் நபர்கள் (Attention seeking personalities), Manipulative personalities and so on.

அவளுடைய பல்கலைக்கழகத்தில் "Suicide" எனும் தலைப்பில் விரிவுரை நடந்து கொண்டிருந்தது...




# புதிர் 13
# பரிசு வேண்டாம்...!

சினமிகா

ஒரு மந்திரவாதி கேட்டுக் கொண்டதற்கிணங்க காட்டிலிருந்த உடலை விக்ரமாதித்தன் சுமந்து சென்றுகொண்டிருக்கும் போது, அந்த உடலுக்குள் இருந்த வேதாளம் வழமை போலவே விக்ரமாதித்தனிடம் ஒரு கதை சொல்ல ஆரம்பித்தது.

ஒரு சமயம் விஜயபுரி என்ற நாட்டில் குருபசேனன் என்ற இளைஞன் வாழ்ந்து வந்தான். அவனுக்கு பிறவியிலேயே அவனது கால்களில் சற்று குறைபாடு இருந்ததால் மற்றவர்களைப் போல் அவனால் இயங்க முடியாமல் இருந்தது. மேலும் குருபசேனனின் தாய் அவன் சிறுவனாக இருந்த போதே இறந்துவிட்டதால், அவனது தந்தை இரண்டாவது திருமணம் செய்துகொண்டார். அப்படி குருபசேனனுக்கு சித்தியாக வாய்த்த அவன் தந்தையின் இரண்டாவது மனைவி, குருபசேனனின் உடல் குறைபாட்டை அடிக்கடி சுட்டிக்காட்டி அவனை இடித்துரைத்து வந்தாள். இதனால் வாழ்க்கையில் ஒரு விரக்தியான நிலையில் இருந்து வந்தான் குருபசேனன்.



அதேசமயம் அந்த நாட்டின் இளவரசியான “இந்துமதிக்கு” அவளின் தந்தையான அந்த நாட்டின் அரசன் திருமணம் செய்ய பல இளவரசர்கள் கலந்து கொள்ளும் ஒரு சுயம்வரத்தை ஏற்பாடு செய்தான். அப்போது இந்துமதி தாம் ஏற்பாடு செய்யும் போட்டியில் கலந்து தனது வீரத்தையும் புத்திக் கூர்மையையும் நிரூபிக்கும் நபரை மட்டுமே தாம் திருமணம் செய்யப்போவதாக திட்டவட்டமாக கூறிவிட்டாள்.

அவள் கூறியபடியே ஒரு உயரமான நடைமேடையில் இருபுறமும் கூர்மையான கத்திகளுக்கு மத்தியில் சிறு கீறல் கூட படாமல் கடந்து சென்று சற்று தூரத்திலிருக்கும் மணல்திட்டின் மீது குதிக்கும் நபரை இளவரசி இந்துமதி திருமணம் செய்துகொள்வார் என்று மன்னர் அறிவித்தார்.

இதைக் கேட்டு பல இளவரசர்கள் அங்கு கூடினாலும் யாரும் அந்த போட்டியில் கலந்து கொள்ளவில்லை. அப்போது அங்கு வந்திருந்த குருபசேனன், தான் இப்போட்டியில் கலந்து கொள்ள மன்னனிடம் அனுமதி கேட்டான். அவனது உடலின் குறைபாட்டை கண்டு முதலில் தயங்கினாலும் பிறகு அனுமதியளித்தார் மன்னர். அதே நேரத்தில் இந்த போட்டியில் ஒருவேளை குருபசேனன் வெற்றி பெற்றால் அவனுக்கு தனது மகளை திருமணம் செய்ய வேண்டி வருமே என கவலையும் கொண்டார் மன்னர். அப்போது போட்டியில் கலந்துகொண்ட குருபசேனன், இளவரசியின் எதிர்பார்ப்புக்கேற்ற வகையில் வெற்றி பெற்றான். அடுத்ததாக அறிவாற்றலை ஆராய ஒரு புதிர் போடப்பட்டது.

டச்சு மற்றும் ஸ்பைக் என்னும் இரண்டு வீரர்கள் சம எண்ணிக்கையான மாபிள்களை வைத்து விளையாட்டொன்றை ஆரம்பித்தார்கள். முதல் சுற்றுக்குப் பிறகு டச்சு ஆரம்பத்தில் இருந்ததை விட 20 மாபிள்கள் அதிகமாக வைத்திருந்தார். ஆனால் இரண்டாவது மற்றும் இறுதி சுற்றில் அவர் தன்னிடம் இருந்த 2/3 மாபிள்களை இழந்தார். ஸ்பைக் ஆரம்பத்தில் இருந்ததை விட 4 மடங்கு அதிக மாபிள்களை வைத்திருந்தார். எத்தனை மாபிள்களுடன் இருவரும் விளையாட்டை ஆரம்பித்தார்கள் மற்றும் விளையாட்டு முடிந்ததும் இருவரிடமும் எத்தனை மாபிள்கள் இருந்தன என்பதை கண்டுபிடிக்க வேண்டும்.

குருபசேனன் சிறிது நேரத்திலே சரியான பதிலுரைத்தான். இதனால் இளவரசி இந்துமதியும் குருபசேனனை மணந்து கொள்ள சம்மதம் தெரிவித்தாள். ஆனால் குருபசேனன் அவளை திருமணம் செய்து கொள்ள மறுத்து விட்டான். அரசர் மிக்க கோவம் கொண்டு காரணத்தை வினவினார். அதற்கு அவன் தான் பல காலமாக தனது அங்க ஊனத்தை குறித்து தனது சித்தி குறை கூறியதால் வாழ்வில் மிகவும் நொந்து

போயிருந்ததாகவும் இப்போட்டியை பற்றிக் கேள்விப்பட்டவுடன் அதில் கலந்து கொண்டு தன்னை போன்ற ஒருவனாலும் எதையாவது சாதிக்க முடியும் என்று உலகிற்கு நிரூபிக்க, இப்போட்டியில் தனது உயிரைப்பற்றி கவலைப்படாமல் கலந்து கொண்டதாகவும் இதில் வெற்றி அல்லது தோல்வி பெறுவதைப் பற்றி அவன் சிறிதும் அக்கறை கொள்ளவில்லை என்றும் அதே நேரத்தில் போட்டியில் வென்று இளவரசியே அவனை மணக்க சம்மதம் கூறியும் ஒரு நாட்டிற்கு ஆபத்து நேரும் காலத்தில் அதை எதிர்த்து சமாளிக்கக்கூடிய உடல்தகுதி தனக்கு இல்லை என்ற நியாயமான காரணத்தை கூறினான். அதைக் கேட்ட மன்னர் அவனை பாராட்டி அனுப்பினார்.

விக்ரமாதித்தனே இது உம்முடைய நேரம் குருபசேனன் கேட்கப்பட்ட புதிருக்கு என்ன பதில் அளித்திருப்பான் என கண்டுபிடியுங்கள் பார்க்கலாம் என கூறி அமைதி கொண்டது வேதாளம். மன்னரும் யோசிக்கத் தொடங்கினார். தூமி அன்பர்களே நீங்களும் சிந்தியுங்கள் பதிலை எமது மின்னிதழிற்கு அனுப்பி வையுங்கள்.

## புதிர் 12 - விடைகள்






## மரக்கலத்தில் சென்ற தந்தம் யானையில் வந்தது!

ஜீவா ஷஜீவனின்

# சிங்கிரித்தலைவன்

ஆட்சி 32

அவசர அவசரமாக காசியப்பனின் யானை சிங்ககிரியை சென்றடைந்தது! அதே நேரத்தில் மீகாரன் தன் குதிரையை எடுத்துக் கொண்டு அனுராதபுர கோட்டையை நோக்கி புறப்பட்டான்! அவனுடன் கூடவே ஐந்தாறு வீரர்களும் சென்றார்கள்.

புனித தந்த தாது புத்தருடையது! அது காலாகாலமாக அரசாட்சியை செலுத்துபவர்களின் அடையாளமாகத் திகழ்ந்தது. இலங்கையின் அரியாசனத்தில் யார் அமர்ந்து இருக்கிறார்களோ அவர்களின் பாதுகாப்பிலேயே புத்தரின் புனித தந்த தாது அமைந்து விளங்கும். அதேவேளை புத்தரின் புனித தந்தத்தின் ஆசியும் பாதுகாப்பும் அரியாசனத்தில் மீதும் இருக்கும் என்பது ஏற்றுக்கொள்ளப்பட்ட அரச அந்தஸ்தாகவும் விளங்கியது!



புத்தர் பரிநிர்வாணம் அடைந்த பிறகு அவருடைய உடற்பாகங்கள் பல நாடுகளுக்கும் எடுத்துச் செல்லப்பட்டதாகவும் அவற்றை வைத்து புனித தாதுகோபங்கள் அமைக்கப்பட்டதாகவும் வரலாறு சொல்கிறது.

அப்படி பாரதத்தின் கலிங்கத்தில் பாதுகாக்கப்பட்ட புத்தரின் பல்லாகிய புனித தந்த தாதுவை, இளவரசி ஹேமமாலி, தன் கணவனான இளவரசன் நந்தா என்பவனுடன், தன் தந்தையான அரசன், குகசிவனின் ஆணைப்படி, தன்னுடைய தலைமுடிக்குள் வைத்து பாதுகாத்து இலங்கைத் தீவை வந்தடைகின்றாள். அப்போது ஆட்சி செலுத்திய ஸ்ரீமேகவர்ணன் (301-328) அவர்களை உபசரித்து, தந்ததாதுவைத் தன் சிரம் மேல் தாங்கி ஆலயமும் அமைப்பித்தான்! அன்றில் இருந்து அது அரச சின்னமானது!

அத்தகு வரலாறு கொண்ட புனித தந்த தாது இன்று மீண்டும் பாரதத்திற்கு கொண்டு செல்லப்பட்டதை எண்ணி காசியப்பன் மிகுந்த கோபம் கொண்டவனாக இருந்ததோடு, அதை முறைப்படி பாதுகாக்கத் தவறிய தன் தவறையும் எண்ணி வருத்தம் மிகக் கொண்டவனாகவும் இருந்தான்!

மகாநாமரின் புத்திசாலித்தனத்தையும், தமிழகத்தில் இருந்தபடியே காய் நகர்த்தும் சாமர்த்தியத்தையும் எண்ணி வியந்தான்! மரபுரீதியாக ஒரு ஆட்சி அதிகாரத்தை எப்படி தக்க வைப்பது என்று மகாநாமர் அறிந்திருந்தார்!

புனித தந்த தாது இல்லாத ஒரு ஆட்சி அங்கீகரிக்கப்படாத ஒரு ஆட்சியாகவே அமையும் அது மக்கள் மத்தியில் அதிருப்தியை ஏற்படுத்தும்! இறை சின்னம் இல்லாத ஆட்சியை ஏற்றுக்கொண்டால், தங்கள் மீது இறைவன் கோபப்படுவான் என்கின்ற ஒரு மாயையை மக்களிடத்தில் அது உண்டாக்கும்! இதன் மூலம் அந்த ஆட்சியை மிக இலகுவாக அழித்து விடலாம் என்பது மகாநாமரின் சிந்தனையாக இருக்க வேண்டும்!

மீகாரன் அனுராதபுரத்துக்குச் சென்று இரண்டு பகல் கடந்து விட்டது!

சிங்ககிரியின் அடிவாரத்துக்குச் சென்றவுடனேயே காசியப்பன் சில வீரர்களை அழைத்து ஒரு பகுதியை சுட்டிக்காட்டி அதை அலங்கரித்து பெரிய கூடாரம் ஒன்று அமைக்குமாறு கட்டளையிட்டிருந்தான்!

இரவு தீபங்களால் அந்த இடம் ஒளிர வேண்டும், என்பதற்காக அவசர அவசரமாக தீப்பந்தங்கள் தயார் செய்யப்பட்டன!

பாதை மிக விரைவாக செப்பனிடப்பட்டது. உடனடியாக அங்கிருந்த அரச வம்சத்தவர்களுக்கு சில அறிவித்தல்கள் வழங்கப்பட்டன. அவர்கள் விரைவாகத் தங்களை அலங்கரித்துக் கொண்டு எதற்கோ தயாராகினார்கள்!

அங்கிருந்த வீரர்கள் சிலர் தமக்குள்

“புத்தரின் புனித தந்ததாது இன்று சிங்ககிரிக்கு வரப்போகிறது”

என்று பேசிக்கொண்டார்கள்! லீலா தேவி தன்னை அலங்கரித்துக்கொண்டு காசியப்பனின் அருகில் ஒரு மேடையில் அமர்ந்திருந்தாள்! தம் அரசியாரைப் பார்ப்பதற்கே பல வீரர்களும் அரச வம்சத்தவர்களும் முண்டியடித்துக்கொண்டனர்!

“என் அன்புக்கு பாத்திரமான இலங்கையின் அரணாக விளங்கும் வீரர்களே! அரச வம்சத்தவர்களே! இன்று என் மனைவி அதாவது உங்கள் அரசியான லீலாதேவியை இவ்விடத்தில் அறிமுகம் செய்து வைப்பதில் நான் அதிக ஆனந்தம் கொள்கிறேன்! அதைவிடவும் ஆனந்தமான ஒரு செய்தி! காலாகாலமாக இலங்கையின் அரசர்களால் போற்றிப் பாதுகாக்கப்பட்டு வரும் புத்த பெருமானின் புனிதப் பல் இன்று அனுராதபுரம் வழியாக புறப்பட்டு நாளை இங்கே வருகிறது! புத்த பெருமானின் ஆசியுடன் இந்த குன்றத்தின் மேலே நாம் ஏறுவோம்!”

“அரசர் வாழ்க!! அரசியார் வாழ்க!!”

அந்த வாழ்த்தொலிகள் சிங்ககிரியில் பட்டு தெறித்தது!

அதே நேரத்தில் அனுராதபுரம் மகாபோதி வளாகத்தில் அலங்கரிக்கப்பட்ட யானையில் புத்தரின் புனித தந்த தாது பயணப்பட தயாரானது!

“புத்தம் சரணம் கச்சாமி
தர்மம் சரணம் கச்சாமி
சங்கம் சரணம் கச்சாமி”

அனுராதபுரமே பௌத்த துறவிகளின் அணிவகுப்போடு சிங்ககிரியை நோக்கிப் புறப்பட்டது.

**பயணம் தொடரும்...**

## தெரியுமா உங்களுக்கு.....?

இந்தியாவின் மிசோரம் மாநிலத்தில் உள்ள பக்த்வாங் என்ற ஊரில் இருக்கும் சியோனா சனா என்பவரின் குடும்பம் தான் உலகிலேயே மிகப்பெரிய குடும்பமாகும். சியோனா சானாவுக்கு மொத்தம் 39 மனைவிகள், 94 குழந்தைகள் மற்றும் 33 பேரக் குழந்தைகள் இருக்கிறார்கள் என்ற வியக்கத்தக்க உண்மையை தெரிந்து கொள்ளுங்கள். இவர்கள் அனைவரும் 100 அறைகள் கொண்ட ஒரே வீட்டில் வாழ்ந்து வருகிறார்கள்.



# COVID-19

நோய்த்தொற்று பரவல் காலப்பகுதியில்

# வாய் சுகாதாரத்தினை பேணுதல்

சஜீவன் சத்தியசீலன்
பல்மருத்துவ பீடம்
பேராதனைப் பல்கலைக்கழகம்




**3) பல்லின் பெரிய பகுதி உடைந்துள்ளதாயின்**



a.உடைந்த பல்லில் சிவப்பு புள்ளி காணப்படுகின்றதாயின் (படம் 1) அல்லது உடைந்த பல்லில் இருந்து இரத்தம் வெளியேறுகின்றதாயின் உடனடியாக பல் வைத்தியரை நாடவேண்டும்.

b. உடைந்த பல்லின் பகுதியினை சேலைன் உள்ள ஒரு குடுவையில் வைத்து பல் வைத்தியரிடம் கொண்டு செல்ல வேண்டும்.

c. வைத்தியரை நாடமுடியாவிடின் உங்களுக்கு தெரிந்த பல் வைத்தியருக்கு உடைந்த பல்லின் தெளிவான படம் ஒன்றினை எடுத்து அனுப்பவதன் மூலம் அறிவுரைகளைப் பெறமுடியும்.

[விபத்துக்கள் மூலம் பாற்பல் அல்லது நிரந்தரப்பல் அல்லது இரண்டு வகையான பற்களும் பாதிக்கப்படக்கூடும்.

குழந்தைகளுக்கு பாற்பற்கள் வெளியில் காணப்படினும் பாற்பல்லுக்கு கீழே எலும்பினுள் நிரந்திர பல்லானது காணப்படும். அதனால் பாற்பற்கள் பாதிக்கப்படும் பொழுது நிரந்தர பற்கள் பாதிக்கப்படக்கூடிய சந்தர்ப்பங்களும் அதிகமாகும். ஆகவே பற்களுக்கு ஏதும் பாதிப்பு ஏற்படின் பல் வைத்தியரின் ஆலோசனைகளைப் பெறுவது அவசியமாகும். குழந்தை கள் விளையாடும் இடங்களினை தேவையற்ற விபத்துக்களினை தவிர்ப்பதற்கு பாதுகாப்பானதாக உறுதி செய்வது பெற்றோரின் கடமையாகும்.]

●வீங்கிய முரசு, முரசில் இருந்து இரத்தம் வெளியேறுதல் அல்லது வேறு முரசு சம்மந்தமான நோய்கள்

சீழ்/சிதல் கட்டியானது பல்லில் இருந்து அல்லது முரசில் இருந்து பரவும் கிருமிகளால் ஏற்படுகின்றது. சிதல் கட்டியானது சின்னதாக ஆரம்பித்து வலியுடன் கூடிய பெரிய கட்டியாக உருப்பெறும். சீழ்க்கட்டியில் இருந்து பரவிய கிருமியினால் முகத்தில் வீக்கம் ஏற்படுமாயின் உடனடியா பல் வைத்தியரை நாட வேண்டும். [படம் 2]


படம் 2

●கடுமையான பல்வலி

ஆழமான பற்சொத்தை மற்றும் பல் வெடிப்புகளில் இருந்து பல் வலி ஏற்படக்கூடும். தாங்கமுடியாத பல்வலியாயின் அருகில் உள்ள பல் வைத்திய நிலையத்தினை நாடவும். கடினமான உணவினை, நிரப்பப் பட்ட பல்லினால் உண்ணும் பொழுது வெடிப்பு ஏற்படக்கூடும். சில நேரங்களில் அவ்வாறான வெடிப்புகளினால் பல்லினை இழக்கக் கூட நேரிடலாம்.

பற்சொத்தையினை சுத்தம் செய்யும் பொழுது அல்லது பல்லை நிரப்பும் பொழுது அல்லது வேர்ச்சிகிச்சை செய்யும் பொழுது வெளியேறும் மிகச் சிறிய நீர்த் துளிகள் காற்றினில் கலந்து சில மணி நேரம் அதே இடத்தில் இருக்கக் கூடும். இந்த நீர்த் துளிகள் மூலம் கொவிட் வைரஸ் அல்லது பற்றீரியா ஆனது இலகுவில் பரவக்கூடும். ஆதலால் சில சமயங்களில் சிகிச்சைக்கு முன்பாக கொரோனா வைரசுக்கு உரிய விரைவான ஆன்டிஜேன் பரிசோதனை எனப்படும் எதிர்பொருள் பரிசோதனை [ Rapid antigen tests for SARS Cov-2 antigen] செய்ய வேண்டிய தேவை ஏற்படலாம்.

-பற்சொத்தை ஏற்பட முக்கிய காரணமாக இருப்பது இனிப்பு பண்டங்களே. சீனி அதிகமாக உள்ள உணவுகள் உட்கொள்வதினை குறைத்துக் கொள்ளவும். அவ்வாறு எடுத்துக்கொள்ள வேண்டுமாயின் பிரதான உணவுடன்



எடுத்துக்கொள்ளவும். பிரதான உணவுகளுக்கு இடையில் குறைந் தளவு சீனியுள்ள உணவுகளை உட்கொண்டாலும் பற்சொத்தை ஏற்படக்கூடிய சந்தர்ப்பங்கள் அதிகமாகும்.

-உங்களது குழந்தைக்கு இரவு வேளையில் சீனி கொண்டுள்ள பாலினை பருக்குவீர்களாயின் உங்கள் குழந்தையின் முன் வரிசையிலுள்ள பற்கள் சொத்தை அடைவதற்கான வாய்ப்புக்கள் அதிகமாகும். எப்பொழுதும் உங்கள் குழந்தைகளை இரவினில் பல் துலக்குவதற்கும் ஊக்குவியுங்கள். இரவினில் பல் துலக்கிய பின்பு உண்பதற்கு அல்லது குடிப்பதற்கு நீரினை தவிர வேறு ஒன்றும் கொடுக்க வேண்டாம்.

குழந்தைகளும் பெரியவர்கள் பாவிக்கும் பற்பசையினை குறைந்த பரிமாணத்தில் பாவிக்க வேண்டும். குடிநீரில் புளோரைட் அதிகமாக உள்ள இடங்களில் [வடமத்திய மாகாணம்] புளோரைட் இல்லாத பற்பசைகளை பயன்படுத்த வேண்டும்.

●கிளினிக் வருகைகள் [Follow up clinics]

-முன்னால் ஏற்பட்ட பற்சேதம் அல்லது கடுமையான முரசு நோய்க்கான[Severe periodontitis] அறிவுறுத்தலுக்கு அமைவாக சரியான நேர இடைவெளிகளில் வைத்தியரை தொடர்பு கொள்ளவும். -சில சமயங்களில் சிகிச்சையின் உரிய பலனை பெறுவதற்காக தவறாது கிளினிக் செல்லவேண்டிய கட்டாயம் ஏற்படும்.

-பொதுமக்களாகிய நீங்கள் முகக் கவசம் அணிந்து தேவையான இடைவெளியினைப் பேணி முறையான சுகாதார வழிகாட்டல்களை பின்பற்றி கிளினிக் வருவீர்களானால் சனநெரிசலன்றி விரைவாக முறையான பாதுகாப்பு பொறிமுறைகளுடன் தகுந்த சேவைகளினை வழங்க நாம் தயாராக உள்ளோம்.

-அவசரத் தேவைகள் இருப்பின் வைத்தியசாலையை அல்லது உங்களது பல் வைத்தியரை தொடர்பு கொண்டு உங்களது சந்தேகங்களை கேட்கலாம்.

-கிளினிக் வருவதற்கு முன்பு வைத்தியசாலையினை தொடர்பு கொண்டு பொருத்தமான நேரத்தினை அறிந்துகொண்டு வருவது சாலச் சிறந்தது.

-சிகிச்சைக்குப் பின்னரான

அறிவுரைகளை முறையாகப் பின்பற்றவும். interdental tooth brush, tooth floss

-சிறந்த வாய் ஆரோக்கியத்தினைப் பேணவும்
பு(f)ளோரைட் உள்ள பற்பசையை உபயோகித்து தினமும் இரு வேளைகள் காலையிலும் இரவிலும் முறையாக பல் துலக்கவும். இது தவிர்ந்து பற்களுக்கு இடையில் சுத்தம் செய்வதற்கு interdental tooth brush, tooth floss போன்றவற்றினையும் பயன்படுத்த முடியும். இதன் மூலம் ஈறு மற்றும் பல் ஆரோக்கியத்தினை சிறந்த முறையில் பேண முடியும். வாயை சுத்தம் செய்யும் திரவத்தினை[mouth wash] வைத்தியரின் ஆலோசனைப்படி பயன்படுத்தலாம். நீண்ட கால பயன்பாடானது பற்களின் நிற மாற்றத்திற்கு வழிவகுக்கும்.

-கொரோனா தொற்றுக்கு



உள்ளானவர்கள் சிறந்த வாய் ஆரோக்கியத்தை பேணுவது முக்கியமானதாகும். உமிழ் நீரில் அதிக செறிவில் வைரஸ் கிருமிகள் காணப்படும். இதனால் நாக்கு மற்றும் பல்லினை முறையாக சுத்தம் செய்து வைத்திருத்தல் மூலமாக வாயினுள் பரவும் வேறு கிருமியின் [secondary infection] அளவு குறைவாக இருக்கும்.

● செயற்கைப் பல் செட் [Denture] பராமரிப்பு

கழற்றி பூட்டும் பல் செட்டினை பற்தூ ரிகை மற்றும் சவர்க்காரம் இட்டு சுத்தம் செய்ய வேண்டும். இரவினில் கழற்றி தண்ணீர் உள்ள ஒரு குடுவையினுள் இட்டு வைக்கவும். காலையில் மீண்டும் சுத்தம் செய்து வாயினுள் பொருத்தவும். கம்பிகள் ஏதும் உடைந்திருந்தால் அல்லது plate உடைந்திருப்பின் நீங்களாக ஒட்டுவதற்கு முயற்சிக்க வேண்டாம். உங்களுடைய அல்லது அருகில் உள்ள பல் வைத்தியரிடம் சென்று காட்டவும்.

வைத்தியர் தவிர்ந்த வேறு நபர்களிடம் ஆலோசனைகளைக் கேட்டு தேவையற்ற சிகிச்சை முறைகளையும் வீட்டு வைத்தியங்களையும் செய்ய வேண்டாம். வைத்தியசாலைக்கு

வருவதாயின் தனியாக அல்லது ஒரு நபருடன் மாத்திரம் வரவும். கூட்டமாக வருவதினை தவிர்க்கவும்.

● உங்களிடம் கொரொனா அறிகுறிகள் இருப்பின் பல் வைத்தியரிடம் தெரிவித்து உரிய சிகிச்சை முறைகளைச் செய்து கொள்ளலாம். அவசர சிகிச்சைகள் இப்பொழுதும் முறையான பாதுகாப்பு பொறிமுறைகளுடன் நடைபெற்ற வண்ணமே உள்ளது.

● அறுவை சிகிச்சைக்கு பின்பு வழங்கப்பட்ட மருந்துகளினை சரியாக நேரம் தவறாது எடுத்துக் கொள்ளவும். வழங்கப்பட்ட அறிவுரைகளினையும் பின்பற்றவும். காயங்களினை சரியான முறையில் காயத்தினை பேணவேண்டும். சந்தேகங்கள் இருப்பின் வைத்தியசாலையினை தொடர்பு கொண்டு கேட்டுக் கொள்ளலாம்.



அறுவைச் சிகிச்சை செய்ய காத்திருக்கும் நோயாளிகள் உங்களது சரியான தொலைபேசி இலக்கத்தினை வைத்தியசாலையில் கொடுக்கவும். வைத்தியசாலையில் இருந்து வரும் அழைப்புகளுக்கு பதிலளியுங்கள்.

விசேட பரிசோதனைக்கான reports வந்துள்ளதா என தொலைபேசியின் ஊடாக குறித்த திகதியில் தொடர்பு கொண்டு கேட்கவும். உங்களுடைய ஒத்துழைப்பும் புரிந்துணர்வும் சிறந்த சேவையினை வழங்க உதவியாக இருக்கும்.

## தெரியுமா உங்களுக்கு.....?



**உலகிலேயே குள்ளமான மனிதர்கள் அதிகமாக வாழும் நாடு இந்தோனேசியா ஆகும். இந்தோனேஷியர்களின் சராசரி உயரம் 5 அடி 1.8 அங்குலம் ஆகும்.**

# சித்திராங்கதா

33

காவ்யமோகன்

## தனியாலோசனை

"இறந்தகாலத்தின் பெருமை குறித்து நாம் மார்தட்டிக் கொண்டிருந்தாலும், அந்தப் பெருமைகள் இறந்தகாலத்தோடே நின்றுவிடுமாயின் அது அந்த இனத்தின் - இராச்சியத்தின் மலட்டுத் தன்மையை காட்டி நிற்கிறதல்லவா? பொறுப்பற்ற காரியங்கள் நாம் இனியும் ஆற்ற நேர்ந்தால் வருங்காலம் எமை வசைபாடித் தீர்க்கும் என்பதை நாம் மறத்தல் கூடாது. இது குறித்து வன்னியர்களுடன் நான் உரையாடவே இவ்வன்னியர் விழா திடீர் ஏற்பாட்டை மேற்கொண்டிருந்தேன்.

கூடி நிற்கின்ற இந்தப் பெருங் கூட்டம் போல எம் கொள்கைகளும் கூடி நிமிர்ந்தால் வீண் கவலைகள் விடுத்து வெற்றிக் கனியை நாம் எட்டிப்பறிக்க இன்னும் அதிகவேளை பொறுத்திருக்க வேண்டியதில்லை வேந்தர்களே!

தக்க வளமும் தஞ்சை சேர் திட வீரப் படையும் துணையிருக்கையில் நாம் இனித் தாமதிக்க தருணமில்லை. அது குறித்த ஆலோசனை கூட்டத்திற்கே தங்களை அவசரமாக அழைக்க நேர்ந்தது. இராஜ விருந்து நிறைவுற்றதும் வன்னி வேந்தர்களை தனியாலோசனை கூடத்தில் சந்திக் கிறேன்."

என்று கூறி வணங்கிய கரங்களோடு அவையிலிருந்து விடைபெற்றார் மாமன்னர் சங்கிலிய மகாராஜா.

வந்திருந்த விருந்தினர் அனைவருக்கும் ராஜவிருந்து வழங்கப்பட்டது. தொடர்ந்து வன்னி வேந்தர்கள், மந்திரி ஏகாம்பரனார், மகிழாந்தகன் இவர்களுடன் வருணகுலத்தானும் தனியாலோசனை கூடத்தில் அமர்ந் திருந்தான். சங்கிலிய மகாராஜா அவ்விடம் வந்து அமர்ந்தார்.

"வன்னி வேந்தர்கட்கு மீண்டும் என் வணக்கம். இத்தனியாலோசனையின் நோக்கம் எதுவென்று இப்போது வன்னி வேந்தர்கள் அறிந்திருப்பர் என்று நம்புகிறேன். பறங்கியனது நயவஞ்சகத்திட்டங்கள் எல்லை மீறிப் போகின்றன. நம் பொறுமைக்கும் எல்லை காண வேண்டிய வேளை வந்துவிட்டது. தஞ்சையிலிருந்து மாவீரர் படையணியினர் வந்து கோப்பாய் அரச மாளிகையில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். பறங்கியனை எதிர்த்து நிற்க நாம் இனி தாமதிக்க வேண்டிய அவசியமில்லை. அதேநேரம் இந்த முன்னெடுப்பு வேளையில் தமிழ் மண்ணின் நல்வேந்தர்கள் அனைவரினதும் எண்ணம் குறித்து அறியும் அவசியமும் நான் உணர்கிறேன்."

மன்னரின் வார்த்தைகளை பொறுமையுடன் கேட்டுக்கொண்டிருந்த அவையில் மூத்தவரான திருமலை பூபால வன்னியர் பேசத்தொடங்கினார்.

“மாமன்னரே, இதில் எமது நிலைப்பாடு மாத்திரம் எங்ஙனம் வேறுபடப்போகிறது? எம் இராச்சி யத்தை நிலைநிறுத்த நாம் பறங்கியனை வென்றாக வேண்டியது காலத்தின் அவசியமாகும். அதற்கான முயற்சியில் முழுதாய் திருமலை வன்னிமை துணைநிற்கும் என்பதில் மாமன்னருக்கு ஐயம் வேண்டாம்”

“அறிவாற்றலிலும் அனுபவத்திலும் மூத்தவரான திருமலை பூபால வன்னியர் மீது நான் எப்போதாவது ஐயங் கொண்டதாய் உண்டா? சபையில் தங்கள் கருத்தை பகிரங்கப்படுத்தவே கோரினேன். தங்கள் மீதான நம்பிக்கை என் உடல் அழிந்தாலும் அழியாது வேந்தரே!” என்று இணக்கமான குரலில் பூபால வன்னியரை நோக்கி கூறினான் சங்கிலியன்.

தொடர்ந்து புத்தளத்து ராஜ வன்னியர்களை நோக்கினார் மன்னர்.

“எங்கள் கருத்தும் பூபால வன்னியரின் நிலைப்பாடுதான் வேந்தே, பறங்கியனை போராடி சாய்க்க வேண்டியது தவிர்க்கப்படமுடியாததாகும். ராஜவன்னியர்கள் அதற்கு பெருந் துணையாய் உடனிருப்பர்.”
என்றார்கள் ராஜவன்னியர்கள்.

சபையில் எல்லா வன்னியர்களும் இதே கருத்தினை கூறிக் கொண்டிருந்தாலும் வன்னியத் தேவன் மாத்திரம் தொடர்ந்தும் அமைதியாகவே இருந்தான்.

மாமன்னன் சங்கிலியன் வன்னியத் தேவனை நோக்கிக் கேட்டான்

“வன்னியத் தேவரே, தாங்கள் மட்டும் ஏன் பேரமைதியில் மூழ்கியிருக்கிறீர்கள்? தங்கள் நிலைப்பாட்டையும் பகிரங்கமாய்க் கூறினால் நன்றாக இருக்குமல்லவா?”

“அரசே, வன்னி வேந்தர்கள் யாவரினதும் நிலைப்பாட்டிலிருந்து நான் மட்டும் ஏன் மாறுபடப்போகிறேன்? என் நிலைப்பாடும் அதுவே தான் அரசே! பறங்கியர்களை சாய்த்துத்தான் ஆகவேண்டும். இல்லாவிட்டால் நாமெல்லாம்



அடியோடு சாய நேரிடலாம்”

“நாமெல்லாம் சாய்வதா? அதுவும் அந்நியராலா? என்ன அர்த்தமற்றும் பேசுகிறீர் வன்னியத்தேவரே” என கோபமாகக் கேட்டார் ராஜவன்னியர் ஒருவர்.

“கோபம் கொள்ள வேண்டாம் ராஜவன்னியரே, அவ்வாறு நிகழும் என்றா உறுதியாய்க் கூறினேன்? நிகழக்கூடிய அபாயம் இருக்கிறது என்பதை வலியுறுத்தினேன். அவ்வ ளவுதான். போரென்று புறப்பட முன் இவை குறித்தும் நாம் தெளிவு கொள்ள வேண்டுமல்லவா? பெரும்போரில் சிறு கரணம் தவறினாலும் பேராபத்து எம்மைச் சூழ்ந்து கொள்ளும்”

“பேராபத்து எம்மை எங்ஙனம் சூழும் வன்னியத்தேவரே? பெரும்படை எம்மிடமிருக்கையில் பேராபத்து என்பது அந்நியன் படையை சூழ்ந்து அவர்களையே அநாதரவாக்கும்.”

என்றார் திருமலை பூபால வன்னியர்.

“பூபால வன்னியர் அவர்களே, போர் என்பது இது போன்ற வாதங்களில் வெல்வதன்று. நிதர்சனத்தை உணர்ந்து கொண்டே போருக்குப் புறப்பட வேண்டும் என்கிற எச்சரிக்கையாகவே கூறினேன். ஏன்? சிங்களக்கோட்டை இராச்சிய வேந்தர்களின் நிலையை அறிவீர்கள் தானே? வர்த்தக வாசல் வழியே பறங்கியனை வரவேற்று பெருலாபம் காணப் பிரயத்தனம் கொண்டனர் சிங்கள வேந்தர். ஆனால் இன்று அவர்கள் இராச்சியமே பறங்கியர் கைவசம் இருக்கிறது. கண்டி மன்னன் கூட இப்போது பறங்கியனிற்கு எதிரான போராட்டத்தில் எமக்குதவ முடியாதெனக் கைவிரித்து விட்டதாய் அறிந்தேன். பறங்கியனை நாம் மட்டும் அவ்வளவு சுலபமாக எண்ணிவிடக்கூடாது வேந்தர்களே!”

“ஆதலால் தாம் கூறவிளைவது என்ன வன்னியத்தேவரே?” என்று கேட்டான் சங்கிலியன்.

“அரசே, நான் கூறவிளைவது யாவும் எச்சரிக்கைச் செய்தி மாத்திரமே, கூடுதல் கவனத்தோடு நாம் கருமமாற்ற வேண்டும் என்கிறேன். அன்றி போர் தொடங்குவதை நான் மறுத்துப் பேசவில்லை வேந்தே. போரிட வேண்டியது கட்டாயமானதுதான். ஆனால்…”

என்று கூறியபடி தயங்கி நின்றான் வன்னியத்தேவன்.

“ஆனால் என்ன வன்னியத்தேவரே? கூறுங்கள்” என்றான் சங்கிலியன் மிகுந்த பொறுமையுடன்.

“பறங்கியரை எதிர்த்துப் போரிட தஞ்சைப் படைகள் தரித்து நிற்கின்றன என்பது மகிழ்ச்சிதான். ஆனால் எம் சேனைப்படைகளையும் நாம் தயார்ப்படுத்த வேண்டியது அவசியமாகுமல்லவா வேந்தே!

“நிச்சயமாக வன்னியத்தேவரே, சேனாதிபதி மகிழாந்தகன்

தலைமையில் நம் சேனாவீரர்கள் தயாராகிக்கொண்டு தான் இருக்கிறார்கள்”

“நல்லது அரசே, ஆயினும் இவ்வேளை நாம் நமது பெரும் எதிரி பறங்கியனை சரிக்க வேண்டின் திறன் மிக்க நம் வீரர்களை நாம் தயார்படுத்தியாக வேண்டும். ஆகையால் நிகழ ப்போகும் யுத்தத்திற்கு சிறையிலி ருக்கின்ற மாவீரர்களையும் நாம் பயன்படுத்தியாக வேண்டியது அவசியமாகும் வேந்தே”

“தாம் பேசுவது யாரைப்பற்றி என்று நான் அறிந்து கொள்ளலாமா வன்னியத்தேவரே” என்று கேட்டான் சங்கிலியன்.

“வீரத்தில் தலைசிறந்து விளங்கிய நம் கடற்படைத்தளபதி பெரியபிள்ளை ஆராச்சியின் புதல்வன் மிக்கபிள்ளை ஆராச்சியைப்பற்றித்தான் கூறுகிறேன் அரசே”

“வன்னியத்தேவரே, அந்த மாபா தகனின் விடுதலை பற்றிய எண்ணத்தை அடியோடு அழித்து விடுங்கள். அரச பெண்களை கவர்ந்து சென்ற கோழைப்பிறவியை வீரன் என்று கருதி போருக்கு அனுப்ப வேண்டுமா? அது ஒருபோதும் நிகழாது வன்னியத்தேவரே..”

“அரசே, மிக்கபிள்ளை உண்மையில் தலைசிறந்த வீரனாவான். சிந்தனை குன்றி இவ்வீனச்செயலை செய்து விட்டான். ஆனால் இப்போது நம் பொது எதிரியை சாய்க்க அவனை உபயோகப்படுத்திக் கொள்வதே உத்தமம் என்று அறிகிறேன் வேந்தே”

சங்கிலியன் முகம் மேலும் கோபங்கொண்டதாய்த் தெரிந்தது.

“வன்னியத்தேவரே, இந்த சபையில் அறுதியாய்க் கூறுகிறேன். மிக்கபிள்ளை ஒருபோதும் விடுதலை பெற மாட்டான். இதுபற்றி இனி நீர் இயம்பாமல் இருப்பதே தமக்கு உத்தமமாகும்.
கோபத்தில் சுட்டெரிக்கும் வார்த்தைகளை உதிர்த்தான் சங்கிலியன்.

“ஆனாலும் அரசே...”

என்று வன்னியத்தேவன் தொடங் கையில் பூபால வன்னியர் வன்னியத்தேவனை தடுத்து நிறுத்துவது போல்

“வன்னியத்தேவரே, வன்னியர் தம் ஒற்றுமை வேண்டின் மாமன்னர் ஆணைக்கு அடிபணியக் கற்றுக் கொள்ளும்.” என்றார்.

“மன்னிக்கவேண்டும் அரசே..” என்று தலைகுனிந்தான் வன்னியத்தேவன்.

அதுவரை பொறுமையாயிருந்த மந்திரி ஏகாம்பரனார் இப்போது பேசத்தொடங்கினார்.

“வன்னி மன்னர்களின் ஒற்றுமையை விரும்பாமல் இருப்பாரா வன்னியத் தேவர்? அதையே பெரும்

ஆயுதமாக்கி அரசர்க்கு எதிராய்த் திருப்ப முயன்றவர் அல்லவா வன்னியத்தேவர்? அவர் எங்ஙனம் வன்னி மன்னர்களின் ஒற்றுமையை வேண்டாமல் இருப்பார்? ”

“என்ன கூறுகிறீர்கள் மந்திரியாரே?”

“ஆம் பூபால வன்னியரே, இதேநாள் இவ்விழா நிகழாதிருந்தால் தங்கள் அனைவரும் இப்போது வன்னியத்தேவரது அரசவையில் இருந்திருப்பீர்கள். வன்னியர்கள் அனைவரையும் அழைத்து அரசர்க்கு எதிராய்ச் செயற்பட வியூகம் வகுத்திருப்பார் வன்னியத்தேவர்”

“அப்படி எவ்வித அழைப்பும் எங்களிற்கு வரவில்லையே மந்திரியாரே” என்று கேட்டார் ராஜவன்னியனார்.

“வருவதற்கு முதலே வன்னியர் விழா பற்றிய அழைப்பை நாம் அனுப்ப நேர்ந்துவிட்டதே..” என்று கூறிச் சிரித்தார் ராஜமந்திரியார்.

அவையிலிருந்த எல்லோருக்கும் வன்னியர் விழாவின் திடீர் ஏற்பாட்டுக்கான காரணம் இப்போது தான் முழுதாய்ப் புரிந்தது. வருணகுலத்தானிற்கும் இப்போதுதான் தெளிவு கிடைத்தது. சித்திராங்கதாவின் அரங்கேற்றத்தை அரசர் அவசரமாக தடுத்து நிறுத்தியதற்கான காரணமும் இப்போதுதான் புரிந்தது. ஆனால் இவை பற்றி எதுவுமறியாத சித்திராங்கதா இவ்வேளை எத்தகைய வேதனையில் மூழ்கியிருப்பாள் என்று எண்ணுகையில் அவன் முகம் மேலும் வாடிப்போனது. ஆனாலும் மந்திரியார் மேற்கொண்ட முடிவு மிகச்சரியானது என்பதை அவனும் இப்போது உணர்ந்திருந்தான். வன்னியத்தேவன் ஏற்பாடு செய்திருந்த அந்தச்சந்திப்பு மாத்திரம் நடந்திருந்தால் - அவன் தன் வாதத்திறமையால் வன்னி வேந்தர்களின் எண்ணத்தை மாற்றியிருந்தால் - தமிழ் வேந்தர்களின் ஒற்றுமை சிதைந்திருந்தால் - நடந்திருக்கக்கூடிய பேரழிவுகளை எண்ணுகையில் சித்திரை முழுநிலவு நாளிலே வன்னியர் விழாவை நிகழ்த்த போராடிய மந்திரியாரது சமயோசித புத்தி குறித்து அவன் தற்சமயம் பெருமிதமாய் உணர்ந்தான்.

அவையிலிருந்த அனைவருமே இப்போது அதனை உணர்ந்து கொண்டனர். தலைகுனிந்திருந்த வன்னியத்தேவன் மெதுவாய்ப் பேசத் தொடங்கினான்.

“மாமன்னரே, மந்திரியார் என் மீது அபாண்டமாய்ப் பழிபோடும் காரணம் குறித்து நான் அறிந்திலேன். வன்னியர் சந்திப்பொன்றை நான் சித்திரை முழுநிலவு நாளில் திட்டமிட்டிருந்தது உண்மைதான். ஆனால் அது மாமன்னருக்கு எதிரான வியூகம் என்று கூறுவது உண்மையிலேயே அபத்தமாகும் அரசே, பறங்கியரை எதிர்ப்பது குறித்து வன்னியர்தம் ஒற்றுமையை அறிந்து கொள்ளவே நானும் அச்சந்திப்பை நிகழ்த்த திட்டமிட்டிருந்தேன். அதுவே வன்னியர் விழாவாய் நிகழப்போகையில் நான்

என் முயற்சியை கைவிட்டேன். ஆனால் மந்திரியார் இவ்வேளை கூறுகின்ற அபத்தவார்க்கைகள் எனக்கு வேதனையளிக்கிறது" என்று சோகமான குரலில் சொல்லிமுடித்தான் வன்னியத்தேவன்.

சங்கிலியன் வன்னியத்தேவனை நோக்கி
"நடந்து முடிந்தவற்றை பேசுவதில் பயனில்லை வன்னியத்தேவரே, தங்களது நிலைப்பாட்டை நாம் தெளிவாகவே அறிந்து கொண்டோம். இனி வருத்தம் விடுங்கள்" என்று லேசான புன்னகையுடன் கூறினான் சங்கிலியன்.

வன்னியத்தேவனும் அமைதியாகவே அதை ஏற்பது போல தலையசைத்தான். அவன் முகம் அமைதியாக இருந்தாலும் உள்ளம் எவ்வளவு கொந்தளித்துக் கொண்டிருக்கிறது என அந்த அவையில் யாரும் அறிந்திருக்க மாட்டார்கள்.
சங்கிலியன் மீண்டும் அவையோரை நோக்கி
"தமிழ் வேந்தர்கள் தம் ஒற்றுமை தலைப்பட்டு நிற்குமாயின் நாம் பறங்கியன் படையினை பயந்தோடச்செய்வது திண்ணமாகும். அதிக இலாப மோகம் காட்டி கோட்டை இராச்சியத்தையே தன் கைக்குள் கொண்டுவந்து விட்டது ஈழவேந்தர்களுக்கு பேரச்சமூட்டும் என பறங்கியன் எண்ணுவது அவன் மடத்தனம். எம் இராச்சியத்தை நாம் எதற்காகவும் பறங்கியனிடம் விட்டு விட மாட்டோம் என்கிற நம் உறுதி பற்றி அனைவரும் அறியும் வண்ணம் செய்ய வேண்டும். நாமெல்லாம் அதைச் செய்து காட்டுவோம்." என்று கம்பீரமாய்க் கூறி முடித்தான் சங்கிலியன்.

அவன் கூறியது போல் ஆள்பவர்கள் யாவரும் ஒன்றுபட்டு நின்றால் எம் உரிமை என்பது எவரிடமும் அடிபணிய அவசியமற்றதாகும் என்பதே உண்மையாகும். ஆனால் அதுதான் எக்காலத்திலும் நிகழ்ந்ததில்லையே!

**காத்திருங்கள்...**

# தெரியுமா உங்களுக்கு.....?


**உலகையே அதிரவைத்த ஹிட்லர் ஒரே ஒரு விலங்கை பார்த்தாலே கொலைநடுங்கி விடுவாராம்.அது என்ன விலங்கு என்று கேட்கிறீர்களா? நீங்கள் நினைப்பது போல அது சிங்கமோ, புலியோ, காண்டாமிருகம்,யானையோ அல்லது வேறு எந்த மிருகமும் கிடையாது. ஹிட்லரையே அச்சப்பட வைத்த விலங்கு எது என்று தெரியுமா? அந்த மிருகத்தின் பெயர் பூனை!உங்களால் நம்ப முடியவில்லை என்றாலும் இதுதான் உண்மை. பூனைகளை பார்த்தால் பயப்படும் Ailurophobia என்ற நோயால் பாதிக்கப்பட்டிருந்தார்.**




அதிரன்

சர்வதேச ஓசோன் படலத்தின் பாதிப்பு மனித குலத்திற்கான சிவப்பு எச்சரிக்கை

சூரியனின் கதிர்களில் உயிர்ச் சூழலுக்குத் தீங்கு விளைவிக்க கூடிய புற ஊதாக் கதிர்களும், அகச் சிகப்புக் கதிர்களும் புவியை வந்தடையா வண்ணம் அவற்றினை உறிஞ்சி எடுத்துக் கொண்டு உயிர்ச் சூழலுக்கு நன்மை பயக்கக் கூடிய கதிர்களை தேவையான அளவு புவிக்கு வழங்குகின்ற ஒரு படலமே ஓசோன் படலமாகும். இவ் ஓசோனில் ஏற்பட்டுள்ள துவாரமே இன்று உலகம் எதிர் நோக்குகின்ற மிகப் பெரிய பிரச்சினைகளில் ஒன்றாகும்.




இவ் ஓசோன் படலத்தைப் பாதுகாக்கும் நோக்கில் 1987 செப்ரெம்பர் 16 இல் கனடாவில் உள்ள மொன்றியலில் பல நாடுகளின் பிரதிநிதிகள் ஒன்றிணைந்து ஓசோன் படையின் அழிவைத் தடுக்க சர்வதேச ஒப்பந்தம் ஒன்றினை மேற்கொண்டனர். இதில் இருபத்திநான்கு நாடுகள் கைச்சாத்திட்டன. அத்தினமே, 1995 ஆம் ஆண்டு முதல் சர்வதேச ஓசோன் தினமாக அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றது.

புவியைச் சுற்றி பல்வேறு வாயுக்களைக் கொண்டிருக்கும் படையே வளிமண்டலம் ஆகும். புவியினுடைய ஈர்ப்புச் சக்தியினாலேயே இவ் வளிமண்டலம் புவியைச் சுற்றிக் காணப்படுகின்றது. வளிமண்டலமானது மாறன்மண்டலம், படைமண்டலம், அயனமண்டலம், வெப்பமண்டலம் என்ற படைகளைக் கொண்டு காணப்படுகின்றது. மாறன் மண்டலத்திற்கும், படை மண்டலத்திற்கும் இடையே 12 – 45 கிலோமீற்றர் வரையான படை மண்டலப் பிரதேசத்தினுள் காணப்படும் மென்படையே ஓசோன் படை எனலாம். ஒரு மெல்லிய புகைமண்டலம் போல ஓசோன் இங்கு பரவிக் காணப்படுகின்றது. அடர்த்தி குறைந்த ஒரு வாயு ஓசோன் ஆகும். இப் பகுதியில் இயல்பாக உள்ள

ஒட்சிசன் மூலக் கூறு மீது சூரியனின் புற ஊதாக் கதிர் வீச்சு தாக்குதல் ஏற்படுத்தி இரண்டு ஒட்சிசன் அணுவாகப் பிரிக்கப்பட்டு, பின் இந்த அணுக்கள் ஒட்சிசன் மூலக் கூற்றுடன் இணைந்து ஓசோன் ($O_3$) வடிவமாக உருவாகின்றது. ஓசோனை முதன் முதலாகக் கண்டறிந்தவர் சி.எப் ஸ்கோன்பின் என்பவராவர்.

ஓசோன் அமைந்துள்ள படை மண்டலமே புவியின் வானிலை, காலநிலை நிலைமைகளுக்கு முக்கியமானதாகும். இப்படையானது சூரியனில் இருந்து வீசப்படும் புறஊதாக் கதிர்களிடமிருந்து பாதுகாப்புக் கவசமாகச் செயற்படு கின்றது. வளிமண்டலத்தில் ஓசோனின் அடர்த்தியை டாப்சன் அலகினால் அளவிடுகின்றனர். ஓசோனின் அடர்த்தியை கணக்கிட பத்தொன்பது வகையான கருவிகள் உள்ளன. அவற்றுள் டாப்சன் ஸ்பேக்ட்டோ மீற்றர், ப்ருவர் ஸ்பேக்ட்டோ போட்டோ மீற்றர், ஜோடு மீற்றர், பில்டர் ஓசோன் மீற்றர் எம்.83, பில்டர் ஓசோன் மீற்றர் எம்.124, மாஸ்ட், ஆக்ஸ்போட்டு, சர்பேஸ் ஓசோன் பப்ளர், எலக்ட்ரோ கெமிக்கல் செல் சோன்ட் என்பவை சிலவாகும்.





அறிவியலாளர்கள் 1920 இல் ஓசோன் படலத்தைக் கண்டுபிடித்த காலத்தில் இருந்து அதன் இயற்கை அமைப்பு, மற்றும் தொழிற்பாடுகள் தொடர்பாக ஆராய்ச்சியில் ஈடுபட்டு வருகின்றனர். 1974 இல் சேர் வூட்ரொலன்ட் மற்றும் மரியா மொலினா என்போர் மனித செற்பாடுகளினால் ஓசோன்படைக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாகக் கண்டுபிடித்துள்ளனர். ஓசோன் படையில் துவாரமேற்பட்டிருப்பது தொடர்பாக 1982 ஆம் ஆண்டு அந்தாட்டிக்காவின் "கலிபே" என்ற இடத்தில் ஆராய்ச்சி நடாத்திய பிரித்தானிய ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்தனர். உறைபனிக் காலத்தில் துவாரங்கள் தோன்றுவதாக NIMBUS -7 எனும் செயற்கை செய்மதியினால் கண்டறியப்பட்டது. 1984 ஒக்டோபர் மாதம் மீண்டும் ஆராய்ந்த போது முன்னரிலும் பார்க்க 30 வீதம் விரிவடைந்திருந்தமை கண்டறியப்பட்டது.

ஓசோனைத் தேய்வடையச் செய்யக் கூடிய பொருட்களை வெளியிடுதலே

ஓசோன் படையின் அழிவிற்கு (Ozone Depleting Substances) காரணங்களாக உள்ளன. இப் பொருட்கள் பிரதானமாக மனிதனின் செயற்பாடுகளினாலேயே வளிமண்டலத்தில் கலக்கின்றன. இவ் ஊறு விளைவிக்கும் பொருட்கள் கைத்தொழில் விவசாய நடவடிக்கைகள் மூலம் உருவாக்கப்படுகின்றது.

குறிப்பாக குளோரோ புளோரா காபன் (CFC Chloro floro carban), கார்பன் தெட்ராகுளோரைட் (Carbon Thetrachlorite), ஐதரோ குளோரோ புளோரோ காபன் (HCFC), மற்றும் மெதில் புரோமைட் (Methil Bromite), போன்றவை பிரதானமாக ஓசோன் தேய்விற்குப் பொறுப்பாய் உள்ளன. ஓசோன் தேய்வானது அதற்கு சேதம் விளைவிக்கும் பொருட்களால் வெளியேற்றப்படும் (ODS Ozone Depleting Substances) பிரதேசத்திற்கோ அல்லது குறிப் பிட்ட இடத்திற்கோ சேதத்தினை ஏற்படுத்துவதில்லை. உலகின்




அனைத்து மக்களுமே அதன் தாக்கத்திற்கு முகம் கொடுக்க வேண்டியுள்ளது. மானிடக் காரணி கள் (Anthropogenic) மூலம் வெளிவிடப்படும் பொருட்கள் ஓசோனின் அழிவைத் துரிதப்படுத்தி, இயற்கை சமநிலை குலைகின்றது.

இவ் ஓசோன் படையின் அழிவுக்கான காரணங்களுள் நாம் அன்றாடம் பாவிக்கும் பிளாஸ்டிக் பொருட்களை எரிப்பதால் அதிலிருந்து வெளியேறும் புகை ஓசோன் மண்டலத்தில் ஒரு படையாகப்படிந்து தாக்கம் புரிகின்றது. அத்துடன் குளிர்சாதனப்பெட்டிகள், குளிரூட்டிகள் என்பனவற்றில் இருந்து வெளியேறும் CFC இதற்குப் பெருமளவு பங்களிப்புச் செய்கின்றது. வர்ணப் பூச்சுக்கள், இலத்திரனியல் கைத்தொழிற்சாலைகளில் இருந்து வெளியேறும் வாயுக்கள், துப்பரவாக்கல் செயன்முறைக்குப் பயன்படுத்தப்படும் ஒரு திரவம், ஐரோப்பிய நாடுகளில் கோதுமைத் தானியத்திற்கு தெளிக்கப்படும் பூச்சி நாசினிகள், அதிவேக விமானங்கள், அணுப் பரிசோதனை போன்றவை ஓசோன் படலத்தில் பாதிப்பினை ஏற்படுத்தி விடுகின்றது. இதனை விட ஏனைய வாயுக்களும் இதில் பங்களிப்புச் செய்கின்றது.



எஸ்.எஸ்.நுஜன்



T-20 உலகக்கோப்பை ௨௦௨௧

# அணிகளின் அலசல் – 03

## இங்கிலாந்து

இறுதியாக நடந்த ரி20 உலக கிண்ணத்தில் இறுதிப் போட்டி வரை முன்னேறி தோல்வி அடைந்த இங்கிலாந்து, தற்போதைய ஒருநாள் சர்வதேசப் போட்டிகளின் சாம்பியன் மற்றும் மட்டுப்படுத்தப்பட்ட போட்டிகளில் மிகவும் பலமான அணியாக திகழ்கிறது. இவர்களின்




துடுப்பாட்ட பாணி அதிரடியானது. மற்றைய அணிகளுடன் ஒப்பிடுகையில் இங்கிலாந்து துடுப்பாட்ட வீரர்கள் ரன்கள் எடுக்கும் வேகம் மிக அதிகமாக இருப்பது நேர்மறை, பந்துவீச்சாளர்களின் ரன்கள் கொடுக்கும் வேகமும் அதிகமாக இருப்பது எதிர்மறை.

2010 ரி20 உலகக் கிண்ணத்தில் வென்றதோடு 2016 இறுதிக்கு முன்னேறியது தவிர்த்து மற்றைய ரி20 உலகக் கிண்ண தொடர்களில் அரையிறுதிக்கு முன்னேறியதில்லை.

சகலதுறை வீரர் பென் ஸ்ட்ரோக்ஸ் மற்றும் வேகப் பந்து வீச்சாளர் ஜோ.ஃ. ப்ரா ஆர்ச்சர் அணியில் இல்லாமை பின்னடைவாக இருந்தாலும் பலம் பொருந்திய அணியினை அறிவித்துள்ளது இங்கிலாந்து. முன்னணி வீரரான ஜோ ரூட் அணியில் இல்லை இவருக்கு கடந்த 2019ம் ஆண்டிலிருந்து ரி20 அணியில் இடம் வழங்கப்படுவதில்லை என்பது குறிப்பிடத்தக்கது. தற்போது



நடைபெறும் ஐபிஎல் போட்டிகள் பின் ரி20 உலக கிண்ணம் என்று போட்டிகள் நடைபெறுகின்ற ஆடுகளங்கள் சுழற்பந்து வீச்சாளர் களுக்கு சாதகமாக இருக்கும் என்று மற்றைய அணிகள் சுழற்பந்து வீச்சுக்கு முன்னுரிமை கொடுக்க இங்கிலாந்து அணியில் அடில் ரசிட் என்ற ஒரேயொரு முதன்மை சுழற்பந்து வீச்சாளரே இடம்பெற்றுள்ளார். அதைவிடுத்து சுழற்பந்து வீசக் கூடிய மொயின் அலி தான் உள்ளார். வேகப்பந்து வீச்சாளர்களில் இடதுகை, ஸ்விங் மற்றும் வேகம் என பலவிதமான வீரர்கள் அணியில் உள்ளமை ரி20க்கு பலம் சேர்க்கும் வகையில் உள்ளது. துடுப்பாட்டத்தில் கலக்க இங்கிலாந்தின் அதிரடி வீரர்கள் இருக்கிறார்கள்.



கடந்த முறை விட்டதை இம்முறை இங்கிலாந்து சாதிக்குமா? என்று பொறுத்திருந்து பார்ப்போம்.

2016 ரி20 உலக கிண்ணத்திற்கு பின்னர் இங்கிலாந்து அணி, மொத்தமாக 50 சர்வதேச ரி20 ஆட்டங்களில் விளையாடி 29 வெற்றி, 19 தோல்வி 1 சமநிலை மற்றும் 1 முடிவற்ற நிலையும் பெற்றுள்ளது. இதுவரை மொத்தமாக 32 ரி20 உலக கிண்ண ஆட்டங்களில் விளையாடிய இங்கிலாந்துக்கு 15 வெற்றி, 16 தோல்வி மற்றும் 1 முடிவற்ற நிலையும் கிடைத்துள்ளது.

### மேற்கிந்தியத் தீவுகள்




ரி20 கிரிக்கெட்டுக்கென பெயர்போன இவர்கள் அதிகமாக இருமுனை தொடர்களில் மேற்கிந்தியத் தீவுகளுக்காக பிரகாசிப்பது குறைவு, ஆனால் ரி20 உலகக் கிண்ணத்தில் வாணவேடிக்கை நிகழ்த்துவர்.

2016 ரி20 உலக கிண்ணத்திற்கு பின்னர் மேற்கிந்தியத் தீவுகள் அணி, மொத்தமாக 67 சர்வதேச ரி20 ஆட்டங்களில் விளையாடி 24 வெற்றி, 36 தோல்வி மற்றும் 7 முடிவற்ற நிலையும் பெற்றுள்ளது. ரி20 உலகக் கிண்ணத்தை இருதடவை வென்ற அணி, இத்தொடரில் இருமுறை அரையிறுதிக்கும் முன்னேறியுள்ளது.

இதுவரை மொத்தமாக 31 ரி20 உலக கிண்ண ஆட்டங்களில் விளையாடிய மேற்கிந்தியத் தீவுகளுக்கு 17 வெற்றி, 12 தோல்வி, 1 சமநிலை மற்றும் 1 முடிவற்ற நிலையும் கிடைத்துள்ளது.



கடந்த 2016 இல் கடைசி ஓவரில் கார்லோஸ் பிராத்வைட் நான்கு சிக்சர் அடிக்க ரி20 உலக கிண்ணத்தை வென்று நடப்பு சாம்பியனாக உள்ள மேற்கிந்தியத் தீவுகள் இம்முறையும் கிண்ணம் வெல்லக்கூடிய பலம் பொருந்திய அணியாக திகழ்கிறது.

துடுப்பாட்டத்தில் மற்றைய அணிகளை துவம்சம் செய்ய கிறிஸ் கெய்ல், கிரான் போலாட், டுவைன் பிராவோ, அன்ரே ரஸ்ஸல் என்ற




முன்னணி ரி20 நட்சத்திர வீரர்களுடன் ஹேட்மேயர், நிக்கோலஸ் பூரான், ரோஸ்டன் சேஸ், இவின் லூயிஸ் என்று தரமான இளம் நட்சத்திரங்கள் இருக்கிறார்கள். பந்து வீச்சாளர்களாக ஹைடன் வோல்ஸ் ஜூனியர் (leg spinner), அனுபவ வீரரான ரவி ராம்பால், தோமஸ், பவியன் அலன், மக்கோய் உள்ளனர் இவர்களுடன் சகலதுறை வீரர்களான ரசல் பிராவோ போலாட் போன்றோரின் பந்து வீச்சும் மேற்கிந்தியத் தீவுகளுக்கு பலம் சேர்க்கும்.

தொடர்ச்சியாக இரண்டாவது முறை மேற்கிந்தியத் தீவுகள் வெல்லுமா என்பதை பொறுத்திருந்து பார்ப்போம்.



| Player | Span | Mat | Inns | NO | Runs | HS | Ave | BF | SR |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| KP Pietersen | 2007-2010 | 15 | 15 | 2 | **580** | 79 | 44.61 | 391 | 148.33 |
| EJG Morgan | 2009-2016 | 23 | 23 | 4 | **484** | 71* | 25.47 | 395 | 122.53 |
| LJ Wright | 2007-2012 | 22 | 20 | 3 | **439** | 99* | 25.82 | 308 | 142.53 |
| AD Hales | 2012-2016 | 14 | 14 | 1 | **356** | 116* | 27.38 | 264 | 134.84 |
| JC Buttler | 2012-2016 | 15 | 15 | 4 | **305** | 66* | 27.72 | 219 | 139.26 |
| C Kieswetter | 2010-2012 | 11 | 11 | 0 | **261** | 63 | 23.72 | 237 | 110.12 |
| JE Root | 2016-2016 | 6 | 6 | 1 | **249** | 83 | 49.80 | 170 | 146.47 |

**ரி20 உலக கிண்ணத்தில் அதிக ஓட்டங்கள் பெற்ற இங்கிலாந்து வீரர்கள்**

| Player | Span | Mat | Inns | Overs | Mdns | Runs | Wkts | BBI | Ave | Econ | SR |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| SCJ Broad | 2007-2014 | 26 | 25 | 86.5 | 2 | 671 | **30** | 3/17 | 22.36 | 7.72 | 17.3 |
| GP Swann | 2009-2012 | 16 | 15 | 55.0 | 2 | 358 | **22** | 3/24 | 16.27 | 6.50 | 15.0 |
| RJ Sidebottom | 2009-2010 | 10 | 10 | 30.5 | 0 | 229 | **13** | 3/23 | 17.61 | 7.42 | 14.2 |
| CJ Jordan | 2014-2016 | 10 | 10 | 33.2 | 0 | 264 | **10** | 4/28 | 26.40 | 7.92 | 20.0 |
| DJ Willey | 2016-2016 | 6 | 6 | 21.0 | 0 | 159 | **10** | 3/20 | 15.90 | 7.57 | 12.6 |
| JM Anderson | 2007-2009 | 9 | 9 | 32.2 | 0 | 233 | **8** | 3/23 | 29.12 | 7.20 | 24.2 |
| ST Finn | 2012-2012 | 5 | 5 | 20.0 | 0 | 123 | **8** | 3/16 | 15.37 | 6.15 | 15.0 |
| AU Rashid | 2009-2016 | 10 | 10 | 32.0 | 0 | 255 | **8** | 2/18 | 31.87 | 7.96 | 24.0 |

**ரி20 உலக கிண்ணத்தில்**
**அதிக விக்கெட்டுகள் வீழ்த்திய இங்கிலாந்து வீரர்கள்**

| Player | Span | Mat | Inns | NO | Runs | HS | Ave | BF | SR | 100 | 50 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| CH Gayle | 2007-2016 | 28 | 26 | 3 | **920** | 117 | 40.00 | 627 | 146.73 | 2 | 7 |
| MN Samuels | 2007-2016 | 20 | 19 | 2 | **530** | 85* | 31.17 | 458 | 115.72 | 0 | 4 |
| DJ Bravo | 2007-2016 | 29 | 25 | 4 | **504** | 66* | 24.00 | 390 | 129.23 | 0 | 2 |
| LMP Simmons | 2009-2016 | 12 | 12 | 1 | **320** | 82* | 29.09 | 244 | 131.14 | 0 | 2 |
| J Charles | 2012-2016 | 13 | 12 | 0 | **247** | 84 | 20.58 | 224 | 110.26 | 0 | 2 |
| ADS Fletcher | 2009-2016 | 11 | 11 | 3 | **219** | 84* | 27.37 | 191 | 114.65 | 0 | 2 |

**ரி20 உலக கிண்ணத்தில் அதிக ஓட்டங்கள் பெற்ற மேற்கிந்திய வீரர்கள்**

| Player | Span | Mat | Inns | Overs | Mdns | Runs | Wkts | BBI | Ave | Econ |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| DJ Bravo | 2007-2016 | 29 | 23 | 72.4 | 0 | 645 | **25** | 4/38 | 25.80 | 8.87 |
| S Badree | 2012-2016 | 15 | 15 | 59.0 | 1 | 326 | **24** | 4/15 | 13.58 | 5.52 |
| SP Narine | 2012-2014 | 12 | 12 | 44.4 | 1 | 231 | **15** | 3/9 | 15.40 | 5.17 |
| R Rampaul | 2007-2012 | 11 | 11 | 37.5 | 1 | 345 | **15** | 3/16 | 23.00 | 9.11 |
| AD Russell | 2012-2016 | 17 | 14 | 39.1 | 0 | 333 | **15** | 2/10 | 22.20 | 8.50 |
| DJG Sammy | 2009-2016 | 25 | 19 | 44.4 | 0 | 308 | **11** | 3/8 | 28.00 | 6.89 |

**ரி20 உலக கிண்ணத்தில்**
**அதிக விக்கெட்டுகள் வீழ்த்திய மேற்கிந்திய வீரர்கள்**